
உ

# பொன்விழா காணும் பாதயாத்திரை
# சிறப்பு மலர் 2013



## ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்கம் அமிர்தகழி மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம பாதயாத்திரையின் பொன்விழா சிறப்பு மலர் - 2013

ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார்


பாத யாத்திரிகர் சங்கம்

அமிர்தகழி

மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் செஞ்சடைப் பெருமான் சற்குரு நாதர்
சடையப்பா சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


நூல் தலைப்பு : கதிர்காம பாதயாத்திரையின் பொன்விழா சிறப்பு மலர்

தொகுப்பாசிரியர் : திரு. அழகரெத்தினம் லோகநாயகம்

முகவரி : ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பாத
யாத்திரிகர் சங்கம்,
அமிர்தகழி, மட்டக்களப்பு.

பதிப்புரிமை : தலைவர்
ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார்
பாத யாத்திரிகர் சங்கம்,

முதல் பதிப்பு : 2013 ஆவணி

பக்கம் : 80

புத்தக அட்டை படவடிவமைப்பு :
சின்னத்தம்பி ரவிந்திரன்
சேவைக்கால ஆலோசகர் (சித்திரம்)

அச்சகப்பதிப்பு : எவகிறீன் அச்சகம்,
185 A, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
065 - 2222607




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | iii |
| ஆசிச்செய்தி | iv |
| பாதயாத்திரை மலர் | vi |
| பொன் விழாக்... | 01 |
| கதிர்காம பாதயாத்திரை | 04 |
| அடியேன் அறிந்த... | 12 |
| புராணம் கூறும்... | 17 |
| பாத யாத்திரை | 21 |
| தியானம் பழகுவோம் | 28 |
| யோக சித்தி | 31 |
| நடைமுறைத் தத்துவம் | 40 |
| திராய்மடு + காவடிச்சிந்து | 45 |
| அனுபவம் + அற்புதம் | 48 |
| தலபாதயாத்திரை | 61 |
| நன்றி நவிலல் | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பக்தி பரவசமாய் யாத்திரை செய்து வழிபாடு இயற்றும் அற்புதத் தலம் கதிர்காமமாகும். இந்த புனிதத் தலத்தை நோக்கிய தலயாத்திரையானது பஜனை, பிரசங்கம் செய்வதோடு ஒரு நூலையும் வெளியிடுவது என்பது மிகச் சிறப்புக் குரியபணியாகும்.

கதிர்காமத்தின் இயற்கை வனப்பை தெய்வீக மகிமையையும் அத்தோடு கதிர்காம வரலாறு, கிரியை வழிபாட்டு விளக்கம், அடியார்களின் அனுபவங்களையும் இந்நூல் வெளிக் காட்டுகிறது.

இப்பணி எதிர்காலங்களிலும்யாத்திரையோடு சம்பந்தப்பட்ட விடயங்களை நூல்கள் வடிவில் வெளியிட வேண்டும் என்பது யாத்திரை சங்கத்தினர் சார்பாக எதிர்பார்க்கின்றேன்.

**திரு.பா.உ.தயாகரன்**
**சட்டத்தரணி**
**சின்ன உப்போடை,**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கதிர்காமத் திருத்தல பாதயாத்திரைகளில் சிறப்பு மிக்கது மட் / அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்கமாகும். சற்குருநாதர் சடையப்பா சுவாமியவர்களால் இடப்பட்ட பணிப்புரைக்கமைய குருவின் கட்டளையாய் ஏற்றுப்பணி புரியக்கிடைத்தமையை நினைவில் கொண்டு பெருமைப்படுகிறேன்.

இவ்வருடம் ஐம்பதாவது ஆண்டாக உள்ளதால் அன்புக்குரிய அடியார் குழுவினால் பொன்விழா மலரொன்றை வெளியிடுவது பாதயாத்திரைக்கு மேலுமொரு மகுடம் சூட்டுவதுபோல் அமைந்துள்ளது. தனிச்சிறப்பாகும்.

பாதயாத்திரையின் நோக்கம் எத்தொழிலை செய் பவராய் திகழ்ந்தாலும் கருப் பொருள் ஆத்மீகமாக இருக்க வேண்டுமென்பதே யாகும். தன்னை யுணர்தல், தீய செயல்களைக் களைந்து கொள்ளல், இயற்கையோடு பழகுதல், இப்படியானவற்றுக்கு களம் என்பதை உணர வேண்டும். யாத்திரையை நிறைவு செய்த அடியார்கள் அனைவரும் நல்ல குணங்களுடன் மற்றவர்க்கு எடுத்துக்காட்டாக வாழ்பவராய் மாறவேண்டும் என்பதேயாகும். யாத்திரையில் கலந்து கொண்ட அனைவருக்கும் என் வாழ்த்துக்கள் கூறுவதோடு இறை ஆசியும் வேண்டுகிறேன்.

**சி. விஜயசிங்கம்.**
(அப்பாசாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சற்குரு நாதர் சடயப்பா சுவாமிகள் வழிவந்த
அப்பா சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவருள் பெற்று திருவருள் பெறுக
திருவருள் மூலம் அகம் மலர்க.

சடையப்ப சுவாமிகளின் வழிவந்த
சுவாமி. மயிலிப்போடி (மயிலப்பா)
திராய் மடு.


**ஓம் குருநாதராம் சற்குருநாதருக்கு.....**

குருவே உங்கள் திருவடி சரணம்
தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவுகுருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

- திருமூலர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சற்குரு நாதர் சடயப்பா சுவாமிகள் வழிதொடர்ந்த
மயிலப்பா சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவமயம்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள்
மெய்மை குன்றா
மொழிக்குத்து ணைமுரு காவெனு நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும்
பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன்
மயூரமுமே

- கந்தரலங்காரம் -

## யாத்திரை மலர்...

சமய மார்க்கமானது பக்தி, யோகம், ஞானம், மூலம் இறையிடம் செல்வதற்கு பாதைகாட்டும் சமிஞ்சை விளக்காகும். அதன் தலையாய நோக்கம் மக்களின் மனவுணர்வுகளை சென்ற விடத்தால் செலவிடாது இறைசிந்தனை நோக்கிப் புலன்கள் சென்றடைய வேண்டுமென்பதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்க்கையில் பல்வேறு தேவைகள் அதில் தடங்கல்கள் இன்னல்கள் குறைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது. இவற்றைத் துணிவுடன் எதிர் கொள்ளவும். புற வாழ்க்கையை விட்டுப் பிரிந்து அகத்தளவில் வாழ்கின்ற வாழ்க்கையில் மனசாந்தியும் ஒருமையும், நிறைவும் பெறவும் சமயம் அருந்துணை புரிகின்றது. என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

உலகத்தை தாங்கி நிற்கும் தர்மத்தை உணர்த்தும் வழி முறைக்கு மனிதவுள்ளங்களை திசையறி கருவியாக நின்று வழிகாட்ட பாதயாத்திரையும் உகந்தவிடயமாகும். உண்டும், உறங்கியும், பேசியும், காலத்தைப் போக்கி நோயுற்று, பாய்படுத்தி, மரணமுற்று இடுகாட்டில் முற்றுப் பெறுமுடலை இறை பக்தி பாதையில் வாழ்நாளில் வாழச் செய்தலும் யாத்திரைக்கே பொருத்தமானது. படித்தோரும் பாவலரும் ஏற்கக் கூடியது இதற்கு தேவை கருப்பொருளாய் உறைமோராய் ஆத்மீகம் மட்டுமே! உப்புப் பானையுள் உப்பு சேர்வது போல் உரிய எளிமையான இடமும் இதுவாகும் யானையைப் பார்த்த குருடனைப் போலல்லாது அவரவர் தேடலுக்கு ஏற்றால் போல் எடுத்துக் கொள்ளலாம். ஆற்றை தூரத்தே நின்று பார்ப்பவர்களுமுண்டு, குளித்து விட்டு செல்பவர்களுமுண்டு, குளித்துவிட்டு குடத்தில் நீர் நிறைத்து கொண்டு செல்பவர்களுமுண்டு இது அவரவர் எண்ணங்களைப் பொறுத்ததே எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை பாதயாத்திரையானது பொன் விழாக்காணும் ஐம்பது ஆண்டுகளை நிறைவு பெறுவதாய் தலைமைச் சுவாமியும், யாத்திரை வழிகாட்டியுமான சுவாமி விஜயசிங்கம் அப்பா மூலம் அறிந்தோம். அன்று பாதம் வைத்த சுவடு ஐம்பதாவது ஆண்டு சுவடாய் இருப்பதாலும் எங்கள் பின் சந்ததியினரும் இந்தச் சுவட்டை புத்தக மூலம் அறிந்து கொள்ள வாய்ப்பாய் இருக்குமென்பதாலும் இதைநூல் வடிவாக்கியுள்ளோம். இதற்கு துணை நின்று ஒத்தாசை புரிந்த ஆசிரியை திருமதி. யோகம்மா. நித்தியானந்தன் மற்றும் ஆ. ஜீவராசா மக்கள் தொடர்பான இணைப்பதிகாரி திரு.பா.உதயாகரன் சட்டத்தரணி, திரு.கா.ஜெகநாதன் கிராம உத்தியோகத்தர், திரு.நாகராசா கருணைநாதன் அபிவிருத்தி உத்தியோகத்தர், அச்சிட்டுத் தந்த எவகிறீன் பதிப்பகத்தாருக்கும் புத்தக பதிப்புக்கு உழைத்த திரு.திருமதி. வரதகுமார் பத்மபிரியா அவர்கட்கும் இந்நூலாக்கத்திற்கு துணை புரிந்த துணைவியார் தேவகி (ஆசிரியை) க்கும் இதய பூர்வமான வாழ்த்துக்கள் நன்றிகள் உரித்தாகுக.

***மேன்மை கொள் சைவ நீதி***
***விளங்குக உலகமெலாம்.***

தொகுப்பாசிரியர்,
**அழகரெத்தினம் லோகநாயகம்**
மாநகர வீதி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாக் காணும் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்கம்.

மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பேராலயத்திற்கு வடக்கே சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது திராய்மடு என்னுமிடம், கடலலை யோசையும் களங்கமற்ற தூய்மையான காற்றும் வீசும் பனை வளம் நிறைந்த இயற்கையான இடம், இது சுமார் முற்பது வருடங்களுக்கு முன்பு அடர்ந்த வன விலங்குகள் நிறைந்த காடு இங்கே பிரம்பு வளமும் இருந்தது. இதனைக் கொண்டு கூடை பின்னுதல் அலம்பல் வெட்டிக் கொடுத்தல் போன்ற தொழில்களைச் செய்து அதில் வரும் வருவாயைக் கொண்டு தனது அன்றாட வாழ்வை நடத்திக் கொள்வதோடு சிறு ஓலை குடிசையமைத்து முருகப் பெருமானைப் பூசி த்து அங்கே வருபவர்களுக்கு நீர் ஆகாரமும், உணவும் கொடுத்து வந்தார் அவர்தான் இன்றைய முருகன் ஆலயத்தின் அருகாமையில் சமாதியடைந்திருக்கும் சற்குருநாதர் சடையப்பா சுவாமிகள் சுவாமியாவார். இவர் தாடி நீண்ட சடை, கோவணம், தோளில் ஓர் வஸ்திரத்துண்டுடன் காட்சி அளிப்பார்.

சாதாரண மனிதர் போல் வாழ்ந்து வந்த இவர் பரி பூரணமான முருக பக்தராய் திகழ்ந்தார், பிறப்பிடம் திராய்மடு இருந்தாலும் அமைதி தேடி காட்டுக்குள் குடிசை அமைத்து வாழலானார். தான் யாரிடமும் கையேந்தாமல் சுயமாக உழைத்து மற்றவர்களுக்கும் ஈந்து வந்தார். தனக்கென எதுவும் தேடவோ, சேர்க்க வோயின்றி ஏழ்மையுடன் இறை சிந்தனையோடு வாழ்ந்த இவரை சமூகம் இறையடியாராய் கண்டது. நாளுக்கு நாள் அவர் செயல்பாடுகள் இறை சிந்தனையில் மேன்மையடைதல் கண்டு அடியார் கூட்டம் இவர் இருப்பிடம் நோக்கிப் புறப்பட்டது சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே அப்படிச் சென்றோர்களில் மாணிக்க சுவாமி. (வெருகலம் பதியில் இறுதிக்காலம் வாழ்ந்து சமாதியானவர்) பிள்ளையான் சுவாமி (தாந்தா முருகன் ஆச்சிரமத்தில் வாழ்ந்து சமாதியானவர்) கோணமலைச் சுவாமி (தாந்தா மடத்தில் வாழ்ந்து சமாதியானவர் மாம்பழச் சுவாமி யாழ்ப்பாணம் நெல்லியடியில் வாழ்ந்து சமாதியானவர். மேலும் விநாசித்தம்பி கோபாலப்பிள்ளை. பூபாலரெட்ணம், தாடிக் கணபதிப்பிள்ளை, தியாகு வால்ராவணன் மயில்வாகனம், நல்லையா சாத்திரியார். இவர்கள் அனைவரும் இறுதிக்காலம் வரை முருகபக்தராய் வாழ்ந்து காட்டியவர்களாவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இக்காலங்களில் சிறுவனாய் இருந்தேன். எனது தொழில் சுவாமிக்கு எடுபிடி வேலை செய்வதே சமைத்த பாத்திரங்களைக் கழுவுதல், விறகெடுத்தல், வந்தவர்களுக்கு தேனீர் வழங்குதல் போன்றவைகளை செய்து கொண்டு திரிவேன். பின்பு வயது வந்ததும் குடிபோதை, சண்டை பிற அனைத்து கெட்ட குணங்களும் என்னிடம் இருந்தன. என்னதான் போதையானாலும் இரவானால் குடி வெறியுடன் காவடிச் சிந்து பாடிக்கொண்டு காட்டுப்பாதையுள்ளால் சுவாமியின் இருப்பிடம் சென்று விடுவேன் . சுவாமியின் காலடிச்சத்தம் கேட்டாலே குழைந்து அவர் காலடியில் இருந்து விடுவேன். சுவாமி அவர்கள் என்னைத்தடவி உணவளித்து உறங்கச் செய்வார் . குளப்படி கார பிள்ளையிடம்தான் பெற்றோர், ஆசான், குரு இரக்கமாய் இருப்பார்கள் என்பது உண்மைதான் அதைச் சுவாமியும் உணர்த்தினார். ஒரு நாள் இப்படிக் கிடக்கையில் சுவாமி அவர்கள் தலையை தடவிய வண்ணம் நீ "விஜயப்பா" இல்ல "விசயமுள்ள" அப்பா என்றார். அதைத் தவிர சுவாமியப்பா, அப்பாச்சி, தம்பி விஜயன், அப்பாசாமி இப்படிச் செல்லமாக மாறி மாறிக் கூப்பிடுவார் சில வேளையில் யாரோடும் சண்டை செய்து கொள்வேன் என்னைக் கூப்பிட்டு தன் காலடியில் வைத்துக் கொண்டு **"பேசாமலிரு"** என்பார்.

இப்படி என் வாழ்க்கை குடியும் கூத்தும் அடிபிடியுமாய் இருந்தது. ஆனால் சுவாமியின் காலடியை பற்றிக் கொண்டவனாய் தான் என் குழப்பங்கள் இருந்தன. ஒருநாள் பிற்பகல் சமையலுக்கான விறகெடுத்துக் கொண்டும் வேறு வேலைகளையும் சுவாமியின் சுற்றாடலில் செய்து கொண்டிருந்தேன் சுவாமியவர்கள் தன் கொட்டில் வாசல் மணப்பரப்பில் ஒய்யாரமாய் ஏதோ யோசித்தவராய் இருந்து கொண்டிருந்தார். அது ஆடி மாத காலமாகும். கதிர்காம யாத்திரியர்கள் கூட்டமாய் அரோகரா கோஷமிட்டு சென்று கொண்டிருந்தார்கள் அதில் சிலர் சுவாமியின் இருப்பிடம் வந்து வணங்கியும் சென்றனர். இதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தார் போல் உரத்த தொனியில் "விஜயப்பா" என்று ஓர் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்ததேன் , "இங்கே வா" என்றார். நான் உடன் சென்று கீழ்படிவாய் நின்றேன். நீயும் கூட்டமாய்ப் பாதயாத்திரை புறப்படுகிறாய் என்றார். ஆம் என்றேன் அதுதான் 1963ம் ஆண்டு ஆடிமாதம் ஒரு பலகையால் அமைந்த சிறு வேல் தாங்கிய சிறு கூட்டமாய் புறப்பட்டோம். அந்தக்காலம் மிருகங்கள் சென்ற அதருகளினால் செல்ல வேண்டும் தண்ணீர் இருக்காது. பழங்களை உண்டுதான் சென்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய வேல்தாங்கி கூட்டமாய் சென்றோர்களில் அமரர் பாலசுப்பிரமணியம் ஐயா வைகுந்தராசா, மயில்வாகனம் (மைலப்பா) துரைசிங்கம், ஜப்பான் வாஸ் ஆகியோர் கொண்ட சிறு கூட்டமாய்ப் புறப்பட்டோம். இதன் அடுத்தடுத்த காலங்களில் பலர் இணைந்து கொண்டனர். இருந்தாலும் சிலர் தொடர்ந்து பங்கு பற்றாமல் வழியனுப்புபவர்களாய் தங்கள் செயல்பாட்டைச் சுருக்கிக் கொண்டதுமுண்டு . பிற்பட்ட காலங்களில் சூட்டி தருமரெட்ணம் அதனைத் தொடர்ந்து தில்லை நாதன்,பார்த்தீபன், யோகசேகரம், நடராஜா, மகாலிங்கம், கோமளா, பிரபாகரன் போன்ற ஒரு துடிப்புள்ள கூட்டம் இணைந்து கொண்டது. இவர்கள் காலத்தில் பாதயாத்திரை பல வழிகளாலும் கடும் வளர்ச்சி அடைந்து கொண்டது. என்றால் மிகையாகாது அந்த வளர்ச்சியின் பெறுபேறே இன்றும் மெரு கூட் டிக் கொண்டிருக்கிறது. என்பதும் காலத்தால் அழியாத உண்மையென்பேன்.

இப்படியான யாத்திரையானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டே இருந்தது. இதனை முன்னெடுத்து செல்வதற்கான சக்தி குரு சுவாமியவர்களின் ஆணையே யாகும். அடியார்களை சமூகமயப்படுத்தி பார்க்கையில் என் மூலம் இறைவன் திருப்திகரமான சேவையொன்றுக்கு வாய்ப்பளித்து விட்டார். என்ற மனமகிழ்வு இந்த யாத்திரையால் அடியார்களிடையே பல முன்னேற்றங்களும் ஏற்பட்டிருக்கிறது. வியாபார முன்னேற்றம், தொழில் வாய்ப்பு, பதவியுயர்வு பிணி தீர்ந்தது, திருமணம் நிறைவேறியது மேலும் பல தகராறுகள் சுமூகமாக தீர்ந்துள்ளது எனலாம். எதிர் வரும் காலங்களில் உரியவர்களை இனம் கண்டு பொறுப்புக்களை கையளித்து விட்டு திராய்மடுவில் ஆச்சிரமம் அமைக்கும் பணியில் இறங்கியுள்ளேன். நிறைவுற்றதும் அமைதியாக அங்கே சுவாமி அவர்கள் வாழ்ந்த இடத்தில் வாழலாம் என உத்தேசித்துள்ளேன். இந்த ஐம்பதாண்டு நிறைவுக்கு ஒத்தாசை புரிந்த பெருமை, அடியார்களாகிய உங்களையே சாரும்.

உங்களை நோக்கி என்னால் கூறக்கூடியது, இறைவனை நம்புங்கள் உள்ளத்தை தூய்மைப் படுத்துங்கள் உங்களுக்குள் ஏற்படும் ஆத்மீக சக்தி கூட்டாக சேர்ந்ததும் ஒரு பெரிய அலையாக மாறிவிடும் எல்லோரும் இன்புற்றிருக்கலாம். உள்ளிருந்து இறைவன் வழிகாட்டுவார்.

சற்குருநாதர் வழிவந்த
சி. விஜயசிங்கம்
(அப்பாச்சி)

*ஓம். தத். சத்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமமும் பாதயாத்திரையும்

பாண்டிய நாட்டின் தென்கீழ்த் திசையில் திருச்செந்தூரும், ஈழநாட்டில் தென்சீர்த்திசையிற் கதிர்காமமும் அமைந்துள்ளது. தேரவாத பௌத்தத்தின் நிலைக்களனாக விளங்குமித்தீவிலே பௌத்த மக்களையும், இந்துக்களையும் கவர்ந்திழுக்கும் அருள்மிகு திருத்தலமாக கதிர்காமம் விளங்குகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம், ஆகிய முச்சிறப்புக்களுமுடையதாய்ப் புராண வரலாற்றுச் சிறப்புக்கள் கொண்டமைந்தது. வெளிநாட்டவரையும் திருவருளால் தன்னகத்தே ஈர்ந்து விளங்கும் திருத்தலம் கதிர்காமமாகும். இத்தலம் இலங்கையின் தென்பாகத்தே ஊவா மாகாணம் தெற்கே முடிவடையும் எல்லையில் தியனகம என்ற காட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. இக்கிராமம் பெரும்பாலும் காடடர்ந்ததாகவே காட்சி அளிக்கின்றது. தரையானது அம்பாந்தோட்டைப் பகுதியில் கடல் சார்ந்த நெய்தல் நில சம தரையாகவும் மேலே செல்லச் செல்ல காடு சார்ந்த முல்லை நிலமாகவும், வடக்கே செல்ல மலைசார்ந்த குறிஞ்சி நிலமாகவும் காட்சியளிக்கின்றது.

குறிஞ்சி நிலப்பாங்கும் குமரவேள் உறை குன்றும் **"சேயோன் மேய மைவரை உலகமும்"** எனப் பழந்தமிழ் நூலாம் தொல்காப்பியம் கூறும் இலக்கணத்திற்கமைந்து விளங்குவது கதிர்காமத்தலமாகும்.

கதிர்காமம் என்பதன் பொருளைப் பார்ப்போமாயின் கதிர் என்பது ஒளி அதாவது முருகக் கடவுள் ஒளி வடிவில் காமமாகிய இருப்பிடத்தில் குடிகொண்டுள்ளார் எனப் பொருள்படும். அதாவது கதிர் என்பது ஒளியெனவும் சுடரிற் பிறந்த முருகக்கடவுள் எனவும், காமம் என்பது அன்பெனவும் கொண்டு கதிர்காமம் எனப் பொருள்படும். இத்தகைய இடம் உலகத் தமிழராற் சிறப்பாக இந்துக்களால் வத்தனை செய்யப்படும் இடமாகத் திகழ்கின்றது.

கதிர்காம வரலாற்றினை ஆராயும் போது மகேந்திர புரியை ஆண்ட சூரனையும் அவன் கிளைகளையும் அழிமிக்க முருகப் பெருமான் பாடி வீடமைத்து இலங்கையில் இறங்கினார். என்றும் இங்கிருந்து சென்றே மகேந்திரபுரியில் போர் செய்து வெற்றி கொண்டார் என்று கந்தபுராணம் கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் முடியும் வரை கதிர்காமத்தில் பாடி வீடமைத்து இருக்கும் போது முருகப்பெருமான் விசுவகர்மாவை ஒலி அவ்விடத்தில் மாடமாளிகை கூடகோபுரங்களோடு கூடிய நகரமொன்றை நிறுவச் செய்தார். சிற்ப சாத்திரங்களுக்கேற்ப அமைந்த அந்நகரில் சகல சித்திகளை அருளுவதும் கோடி சூரியப் பிரகாசம் பொருந்தியதுமான நவரெத்தினங்களால் ஆக்கப்பட்ட சிந்தாமணி ஆலயத்தின் நடுவே, இந்திர நீலத்தான சிம்மாசனத்தில் பெருமாள் தேவர்கள் துதிக்க வீற்றிருந்தார். என தட்சண கைலாய புராணம் கூறுகின்றது.

மகாவம்சம் கதிர்காமம் பற்றிய செய்தி ஒன்றினைக் குறிப்பிடுகின்றது. சங்கமித்தைப் பிக்குனியால் கொண்டுவரப்பட்ட போதிவிருட்சத்தின் கிளை இங்கு கொண்டு வரப்பட்டு இம்மரக்கிளை நடப்பட்டதாக கூறுகின்றது. இன்று இத்தலத்தில் காணப்படும் வெள்ளரசு இதன்வேரில் தோன்றியதாகக் கூறப்படுகின்றது.

துட்டகைமுனு எல்லாளனை போரில் வெற்றி பெற்றால் கதிர்காமம் ஆலயத்தை கட்டுவிப்பதாக வேண்டுதல் செய்து போரில் எல்லாளனை வென்று இவ்வாலயத்தை கட்டியதாக "கந்த உபாத" என்ற நூல் குறிப்பிடுகின்றது.

இதே போன்று மானவர்மன் சோழரை நாட்டில் நின்று துரத்த உதவுமாறு கதிர்காம முருகப் பெருமானை வேண்டி மாணிக்ககங்கை கடலுடன் சங்கமமாகும் இடத்தில் சட்கோண இயந்திரம் நிறுவி கந்தனை உபாசனை செய்து முருகப் பெருமான் காட்சி அளித்த போது தாகசாந்தி அளிக்க கருதி இளநீரின் முசிளைத் திறந்த போது இளநீர் சிறுதுவாரத்தின் ஊடாக நிலத்தில் ஒழுகித்தீர்ந்து போக தன் கண்களிலொன்றை இளநீராகப் பாவனை செய்து அர்ச்சித்து அவரது தாகந் தீர்த்து கதிரைமலையானின் அருளைப் பெற்று இலங்கையிலிருந்து துரத்தியதாகக் கூறப்படுகின்றது.

அதே போல் கி.மு.500 ஆண்டளவில் விஜயன் இலங்கைக்கு வந்த போது கதிர்காமப் பெருமானுக்கு ஆலயம் கட்டப்பட்டதாக பூர்வீக இலங்கை என்ற நூலில் குறிப்பிடப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட வரலாற்றுச் சிறப்புக்களுடன் 2ம் இராசசிங்கள் கட்டிய ஆலயத்தில் உறைதல், வயிப்பட்ட இராமநாதனுக்கு அருள் புரிந்தமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக்காட்சிகள், அருணகிரி நாதர் பிள்ளையாரை தரிசித்து. பானமை பிள்ளையாரை வணங்கி சன்னியாசி மலை நோக்கிச் செல்வோம். அன்று இரவு சன்னியாசி மலையில் தங்குவோம். அது அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட குன்று ஆகும். இங்கு இப்போதும் சன்னியாசிகள் வாழ்கின்றார்கள் என்பது ஐதீகம். இங்கு முனிவர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கான சான்றுகள் உள்ளன. குன்றின் உச்சியின் நீராடற் பொய்கைகள் இரண்டு உள்ளது. நீராடுவதற்கு மிகவும் இனிமையாக இருக்கும். இங்கு நேர்த்திக்கல் வைப்பது வழக்கமான ஒரு ஐதீகமாகும். புதிதாக நேர்த்தி வைப்போரும் வழக்கமான ஒரு புறமும் நேர்த்தி நிறைவேறியவர்கள் வைத்த கல்லை எடுப்பது ஒரு புறமும் நிகழ்ச்சியாக இடம் பெறும். பின்னர் சந்நியாசி அப்பனுக்கு பஜனை செய்து பிரசாதங்கள் படைக்கப்படும் அப்பிரசாதங்கள் அனைத்து சுவாமிகளுக்கும் வழங்கப்படும்.

நாங்கள் இது வரை உள்ப்பகுதிகளையே கடந்து வந்தோம் இப்போது இது காட்டுப்பகுதியாக இருப்பதால் சில்லென்ற காற்றும், பறவைகளின் ரீங்காரத்துடன் நித்திரை செய்வோம். விடியற்காலை அரோகரா என்ற ஒலியுடன் எழுந்து காலைக் கடன்களை முடித்து உகந்தை அப்பனை சென்றடைவோம்.

உகந்தை முருகனைப் பற்றிய ஐதீகக்கதை ஒன்றும் உள்ளது. அதாவது வள்ளி, தெய்வயானை இருவரதும் விருப்பத்திற்கிணங்க மரக்கலத்தில் ஏறி நாட்டுவளம் பார்க்க வென்று குமாரக் கடவுள் வந்திறங்கிய இடம் காங்கேயன் துறை என்றும் இம்மரக்கலம் உகந்தைக்கருகில் கல்லாக இன்றும் காட்சியளிக்கின்றது. இத்தகைய புனிதத்தலத்தில் வள்ளியம்மன் மலை உள்ளது. இரு தீர்த்தக்கிணறுகள் உண்டு. இங்கு தீர்த்தம் ஆடி வள்ளியம்மனுக்கு நேர்த்திக் கடன்களை முடித்து அன்று இரவு தங்கவிடுவோம். அதிகாலை எழுந்து கடற்கரையில் தீர்த்தமாடி நன்னீர் ஊற்றினும் திர்த்தமாடி முருகன் தனது பாதத்தை பதித்த மலைச் சாரல்களுக்கு செல்வோம் அங்கு நேர்த்தி முடித்து பஜனை செய்வோம்.

அப்பஜனையில் உரு வந்து ஆடும் சுவாமிகளைப் பார்க்கும் போது தாரை தாரையாக அனைவரும் மெய்மறந்து கண்ணீர் வடிப்பார்கள் இது வியத்தகு விடயமாகும். பின்னர் மதிய உணவு உண்ட பின்னர் எங்கள் காட்டுப்பாதை வழி தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்டமை, பத்தினிக் கோயில், வள்ளி, தெய்வானை, முத்துலிங்க சுவாமி கோயில், வேட்டுவச் சிறுவனும் சிறுமியுமாக முத்துலிங்கத்திற்கும் பணி புரிந்து ஈற்றில் காட்சி கொடுத்து இன்றுவரை அவர் வரைந்த அட்சரப் பொருளாய் பேழையில் உறைதல், கல்யாணகிரி, ஜயசிங்ககிரி, மங்களகிரி, கெசபுரி ஆகிய முனிவர்களை தொண்டராகப் பெற்றமை, பாண்டிய நாட்டரசியான பாலசுந்தரியும் தொண்டராக்கி உய்த்தமை, பொன்னுள்ளதெனக் கொள்ளை அடிக்க வந்த பறங்கியரை வழிகண்டு பிடிக்க முடியாது துரத்தியமை போன்ற அற்புதங்களை நிகழ்த்திய தலமே கதிர்காமமாகும்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் பக்தியுடன் முருகக் கடவுளை வேண்டுபவருக்கு வேண்டியதை அள்ளி வழங்கும் முருகப் பெருமானை தரிசிப்ப - தற்காக நாங்கள் பாதயாத்திரையாக செல்கின்றோம் என்றால் மிகையாகாது.

இப்பாதயாத்திரை மட்டக்களப்பு மாமாங்க ஸ்வரத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. இபபாதயாத்திரையினை மேற்கொள்ளும் அடியார்கள் அனைவரும் காவி உடை தரித்து, உருத்திராட்சம் அணிந்து தங்களது பொருட்களையும், நேர்த்திக் கடன்களையும் தனித் துணியினால் தைக்கப்பட்ட முடிச்சினிலே வைத்துக் கொள்வார்கள். இது எங்கள் பாதயாத்திரையில் மேற்கொள்ளப்படும் சிறப்பம்சமாகும்.

இப்பாத யாத்திரைக்கு செல்வதற்கு முதல் நாள் மாமாங்கத்தில் தங்கி அன்று அதிகாலையில் **"அரோகரா"** எனும் ஒலியுடன் எழுந்து குளத்தில் தீர்த்தமாடி எங்கள் பாதயாத்திரைக் குழுவின் தலைக் குருவான அப்பா சுவாமி உருத்திராக்க மாலை அணிவித்து விக்கினங்களைப் போக்கும் விநாயகப் பெருமானை வணங்கி எங்களது யாத்திரையை தொடங்குவோம். அவ்வாறு யாத்திரையைத் தொடங்கும் போது

**போரேன் கதிரைமலைக்கு - நாங்களும்**
**போக வழித்துணையாய் வா நீயென்று**

என்று கூறிக்கும்பிட்டு தொழுது கவலை நீங்கி களுதாவளை பிள்ளையாரை வணங்கி கல்முனை முருகனை வணங்கி, பத்தினித் தெய்வமாகிய காரைதீவு கண்ணகி அம்மனைத் தரிசித்து, அக்கரைப்பற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தினித் தெய்வத்தை தரிசித்து திருக்கோயில் முருகனைத் தரிசித்து பொத்துவில் அப்பாசகனை கடந்து எமது பாவமூட்டைகளை குறைத்துச் செல்கின்ற இடங்களாகும். இவ்வாறு செல்லும் போது புறாக்கள் சூழ்ந்து கூவுதல் மரை மானினங்கள் தாவிக்பாய்தல் , யானை, புலி உலவுதல் போன்ற நேரங்களில் கால் நடையாகக் கதிர்காமம் நோக்கி செல்லும் போது "முருகா" எனக் கூறினால் காட்டு விலங்குகள் ஊறு செய்யாது விலகி நடக்கும்.

நாவலாறு அல்லது நாவலடி என்பது யாத்திரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும்.இங்கு தான் முருகன் தனது அடியார்களுக்கு காட்சி அளிப்பதும், தனது விளையாட்டுக்களை காட்டுகின்ற இடமாகும்.

இவ்விடத்தில் எங்களுடன் பாதயாத்திரையாக வந்தவர்களுக்கு முருகக்கடவுள் காட்டு வழியிலே வழிகாட்டுவான் வேண்டித் தொண்டுக்கிழமாய்த் தோன்ற இருவரும் உடன் வந்தோரும் தோளிற்சுமந்து சென்றமையும் இங்குள்ள நாவல் மரத்தில் ஏறி மறைந்த செய்தியையும் குறிப்பிடுகின்றேன்.

**புத்தல் வழியிலொரு பொய்கையுண்டு அவ்விடத்தில்**<br>
**தொத்தல் கிழவன் தொண்ணூறு சென்றவன் போல்**<br>
**இரவு படுநேரம் எங்கோர் திரு ஓட்டை தலைக்குயரமாக்கி வைத்து முயணித்திருப்பதையும்**<br>
**ஐயனே சுவாமியிந்த ஆரணியந்தனிலே**<br>
**தனியாய்ப் படுத்திருக்கும் சங்கதியை சொல்லுமென்றார்**<br>
**அகண்ட வெகுதூரம் அங்கிருந்து இங்குவந்தேன்**<br>
**ஆனதினால் என்றனுக்கு அதிகப் பசியாகி**<br>
**மெத்தப் பசியோடு விழுந்து படுத்திருக்கேன்**<br>
**சொல்லி ப்படுத்திருந்த துவண்ட கிழவனையும்**<br>
**தோழிற் சுமந்தோம் அந்தக்கிழவனையும்**<br>
**கதிர்காமம் நோக்கி நாம் நகரும் போது**<br>
**திரும்பிப் பார்த்தோம் கிழவனைக் காணவில்லை**

என எமது சுவாமி அடியார்கள் தங்களது அனுபவத்தை வாயாரச் சொல்ல மனதால் பக்தி கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய புனிதத்தன்மை வாய்ந்த காட்டுவழியில் எங்களது பாதயாத்திரிகர்களால் அடைக்கப்பட்ட சிறு இடம் ஒன்று உள்ளது அதில் இரவு நேரத்தில் பஜனை செய்து ரொட்டி, இனிப்புக்கள்

உகந்தை முருகன் சந்நிதியில் புதிதாக பாதயாத்திரையைத் தொடங்கும் புதிய சுவாமிகளுக்கு மாலை அணிவித்து அப்பாசாமி, மயிலப்பாசாமி ஆகியோரை வணங்கி விக்கினங்களைப் போக்கும் விநாயகப்பெருமான் ஏறக்குறைய 1000 வருடங்கள் பழமை வாய்ந்த நாவல் மரத்தின் கீழ் உள்ளார். அவரை வணங்கி வண்ணாத்தி வெட்டையை நோக்கி செல்வோம். அரோகரா ஒலி எழுப்புவோரும், கந்தசஷ்டி கவசம் ஓதுவோரும், கந்தனின் கதிரைமலைப் பதிகம் பாடுவோரும், தேவார திருவாசகங்கள் இசைத்த வண்ணமே அனைத்து சுவாமிகளும் தமது நடை யாத்திரையை மேற் கொள்வார் மாலை 6 மணி அளவில் முருகனின் துணை கொண்டு வண்ணாத்தி வெட்டையை அடைவோம் அன்று இரவு அங்கு தங்கி நிற்போம்.

அதிகாலை வேளையில் அரோகரா ஒலியுடன் எழுந்து காலைக்கடன்களை முடித்து முழுக்கண் நோக்கி எங்கள் பயணத்தை தொடங்குவோம். இங்கு பிடிகள் தம் கன்றுகளுடன் உலாவி வருவதும் தண்ணீர் குடிப்பதும் தோகை மயில்கள் பெட்டை மயில்களோடு உலாவுதலையும், தம்இச்சைப்படி ஆடி மகிழ்வதையும் காணலாம்.

சிகண்டி முனிவர் அகத்தியரிடம் இசை நுணுக்கங்களை கேட்டுவித்து கதிர்காமம் நோக்கி வருகையில் வியாழபகவானால் சபிக்கப்பட்ட ஐராவசு எதிர்ப்பட்டது. முனிவர் வெற்றியை சடாட்சர மந்திரத்தை உச்சரித்து வீசிய போது அது வேலாகச் சென்று யானையைக் கொல்ல ஐராவசு சாபவிமோசனம் பெற்று மானிடனானான். பின் இருவரும் கதிர்காமம் சென்று வழிபட்டனர். இப்படியான சந்நியாசிகள் நடந்து சென்ற பாதையில் நான் பாதை யாத்திரை செல்வதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும் இத்தகைய பாதையாத்திரை செய்யும் சுவாமிகள் அனைவரும் புண்ணியவான்களே.

பின்னர் குமுககனை அடைவோம் அங்கு பத்தினித் தெய்வமாகிய குமுக்கன் அம்மனை தரிசிப்போம் இவ் அம்மனுக்கு நேர்த்திக் கடன்களை முடித்து குமுக்கன் ஆற்றை கடந்து அக்கரையில் தங்கிவிடுவோம். அன்று அதிகாலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து நாவலாற்றை நோக்கி யாத்திரை செல்லும் போது வைத்து வழிபடுவோம். இங்கு ஒரு முருக அடியார் சிவபதம் அடைந்ததாகவும் கூறப்படுகின்றது. அங்கிருந்து அதிகாலையில் யால நோக்கி அரோகரா ஒலியுடன் செல்வோம் இது நீண்ட பாதயாத்திரை யாகும்.

யால நோக்கிச் செல்லும் பயணம் மிகவும் இனிமையானது வானளாவிய மரங்களில் மந்திகள் தாவிப் பாய்வதையும் ஒரு மந்தி குறிவைத்து கனி பிடுங்க எத்தனிக்கும் போது வேறொரு மந்தி அதனை பிடுங்க இரு மந்திகளும் சண்டையிட்டு பாயும் காட்சி வியக்கவைக்கும். அதேநேரம் நாங்கள் ஆஞ்சநேயா அரோகரா என சத்தம் இட்டுக் கூறும் போது அவை ஓடிவிடும். இங்கு தான் எங்களது பயண இறுதி நாளும், ஒன்று கூடி நிறைய உணவு சமைத்து கறிவேப்பிலைச் சம்பல் இட்டு உண்ணும் உணவின் சுவை சொல்ல முடியாது. யால ஆற்றில் ஆசை தீரக்குளித்து எங்களது உடைகள் அனைத்தையும் சுத்தம் செய்து எங்களது நோக்கத்தை நிறைவேற்ற தயாராகும் நாள் எங்களது பயணம் முடியும் இறுதி நாள்.

பி.ப 1.30 மணி அளவில் உணவை முடித்துக் கொண்டு வீரச்சோலை நோக்கி பயணமாகுவோம். மலைகண்ட கல்லில் நின்று கதிரை மலையானை வணங்கி நேர்த்தி முடித்து வீரச்சோலையை மாலை நேரத்தில் அடைவோம். அன்றிரவு அங்கு தங்கி அதிகாலை வேளை கதிர்காமம் நோக்கிச் செல்வோம்.

இந் நிகழ்வு பார்ப்பவரது மனதை ஈர்க்கும் நிகழ்ச்சியாகக் காணப்படும் அனைத்து சுவாமிகளும் காவி உடை தரித்து இருவர் ஒருவர் பின் ஒருவராக நூற்றுக்கணக்கானோர் சிவனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டு நீண்ட வரிசையாக வேலனைச் சந்திக்கும் ஆவேசத்தில் எங்களை பாதுகாத்து வழிநடத்திச் சென்ற வேல் முன்னால் செல்ல சுவாமிமார் பின் தொடருவார்கள் இக்காட்சியானது இமாலயத்தில் தவமிருந்து காசி விசுவ நாதரைச் சந்தித்து காசியில் நீராட வரும் ரிஷிகள் போல் காட்சியளிப்பார்கள். இந்நிகழ்வு ஏறக்குறைய கும்பமேலாபோல் காட்சி அளிக்கும். பின்னர் கதிர்காமக் கந்தனை அடைந்ததும் பக்தியும் பரவசமுமாக கண்ணீர் மல்க கந்தனை வணங்கி, வேலை வைப்போம் பின்னர் அப்பாசுவாமி, மயிலப்பாசுவாமி, எமது சுவாமிகளில் மூத்தோரையும் வணங்கி இத்துடன் யாத்திரை முடிவடைந்து தங்கள் நேர்த்திகளை முடிப்பதற்காக சுவாமிமார்கள் செயற்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதயாத்திரையில் நான் கண்ட சிறப்பம்சங்கள்

1. **முகாமைத்துவம்** :- ஒரு குறித்த நோக்கத்தை அடைந்து கொள்ள வேண் டுமாயின் சிறப்பான முகாமைத்துவம் பேணப்பட வேண்டும் இங்கு இது சிறப்பாக பேணப்படுகின்றது. என்பதை அனுபவவாயிலாக அறிந்தேன்.

2. **உணவு** :- சமைப்பது, அதனைத் பங்கீடு செய்வதற்கென குழு உள்ளது. அக்குழுவினர் பொறுமையுடனும் , சுவையாகவும், சமைத்து பங்கீடு செய்வது இக்குழுவினருக்கு நன்றி தெரிவிப்பதுடன் முருகனின் அருளும் கிடைக்க வேண்டும்.

3. **தலைமைத்துவம்** :- அப்பா சுவாமியின் வழிகாட்டல், குருவின் சொல் கேட்கும் சுவாமிகள் கூட்டம், சுவாமிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர். சிலவேளைகளில் முருகனாகவும் காட்சி அளிப்பார் இது எனது சொந்த அனுபவம்.

4. **வைத்தியக் குழு** :- ஆங்கில வைத்தியம் அளிக்கப்படும் குழுவினர் ஒரு புறம், தமிழ் வைத்தியம் செய்யும் குழுவினர் இவர்கள் இரு குழுக்களுடன் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பாங்கு.

5. **புரிந்துணர்வு** :- ஒருவருக்கொருவர் உணவு பரிமாறல், தேவைக்கேற்ப உதவி புரியும் மனப்பாங்கு.

6. **பாதணிக் குழு** :- இவர்கள் சேவை காட்டு வழிப்பாதையில் மகத்தானது.

7. **பஜனைக் குழு** :- இவர்கள் களைப்பு பாராது பஜனை செய்து இறைவனுடன் ஈர்க்கச் செய்தல்.

8. **பாதுகாப்புக் குழு** :- பாதயாத்திரையின் போது சிறுவர், வயோதிபர், வேகமாக நடக்காதோரை அவர்களுக் கேற்ற வகையில் பாத யாத்திரையில் உதவி அழைத்து வருவோர் இரவு தங்களின் போது விறகு எடுத்து தீனா இட்டு பாதுகாப்பை வழங்குவோர்.

9. **பஜனை குழுவிற்கு பாடல்களை அச்சிட்டு வழங்குவோர்**

10. **அன்னதானத்தை வழங்கும் குடும்பம்.**

இவ்வாறு திட்டமிட்டு தலைமை வகித்து முகாமைத்துவம் செய்யும் அப்பாசுவாமிக்கு நன்றி சொல்வதுடன் மேற்கூறப்பட்ட முகாமைத்துவம் செய்யும் அனைத்து சுவாமிகளுக்கும் முருகன் அருள் பாலிக்க வேண்டும் என வணங்கி இப்படியான அனுபவத்தை பெற வாய்ப்பளித்த எனது கணவருக்கும், பிள்ளைக்கும் நன்றி கூறி இவ்வனுபவத்தை எழுதுவதற்கு சந்தர்ப்பம் அளித்த பாதயாத்திரை சங்கத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**திருமதி.யோகம்மா நித்தியானந்தன்**
**ஆசிரியர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அடியேன் அறிந்த பாத யாத்திரை வரலாறு

ஓம் குரு ப்ரம்மா குரு விஷ்னு
குரு தேவோ மஹேஷ்வரஹ
குரு ஷாக்ஷா பரப்ரம்மா தஸ்மை
ஸ்ரீ குருவே நமஹ.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
உன்மையுமாம் தின்மையுமாம்
கூனாகி கூனாகி என்று வர வர கூட்டி
மாணாகி நின்றாயே என் குருவே
என் சொல்வே வாழ்த்து வேனோ
சரணம் சரணம் சரணம் ~ (அப்பா சுவாமிகள்)

செஞ்சடைப் பெருமான் சற்குருநாதர் சடையப்பா சுவாமிகளின் வழிவந்த அப்பாசுவாமிகளினது பாதாரவிந்தங்களை வணங்கி, குமரன் சுவாமியின் ஆசீர்வாதத்துடன், ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாத யாத்திரிகை வரலாற்றினை யாத்திரிகர்களுக்காக பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## 1. பாதயாத்திரையும் அடியேன் அறிந்த யாத்திரை வரலாறும்.

கதிர்காம பாதயாத்திரையானது இப் பூவுலகில் தோன்றி வளர்கின்ற ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய ஒரு ஆன்மீக பணியாகும். இப்பணியானது ஒவ்வொருவரும் நினைத்தவுடன் மேற்கொள்ளும் விடயமல்ல. இது எம் பெருமான் அவர்களின் அனுக்கிரகத்தினாலேயே நிறைவேற வேண்டிய ஒன்றாகும். ஒரு செயலினை நாம் மேற்கொள்ள வேண்டுமாயின் எம்மை ஒழுக்க முறையில் வழிகாட்டும் குரு, கட்டுக்கோப்பான அமைப்பு முறை, அதற்கென அணியப்படும் வஸ்திரம் முறை போன்றன அமையப் பெற்றிருக்க வேண்டும். அத்தோடு நித்தமும் உணவினை விடுத்தோ அல்லது சுருக்கியோ. உறக்கத்தினை (நித்திரையினை) குறைத்தோ தவிர்த்தோ இறை சிந்தனையுடன் அவரின் நாமங்களினை உச்சரித்தும், திருவிளையாடல் கதைகளினை பிரசங்கம் செய்தும். பஜனைகள் செய்தும், தியானத்தினை மேற்கொண்டும், யாத்திரையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளல் சாலச் சிறந்ததாகும். ஆனால் யாத்திரையினை மேற்கொள்ளும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களில் குறிப்பிடப்படக் கூடியவர்களே வழிகாட்டல் மூலம் ஒழுங்கு முறையான யாத்திரையினை மேற் கொள்கின்றனர். இதனையே எமது ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்கமானது குரு வழிவகையில் ஒழுங்கு முறையில் யாத்திரையினை மேற்கொண்டு வருகின்றமையினை கடந்த வருட (2012) யாத்திரையின் மூலம் உணர முடிந்தது. இதன் மூலம் யாத்திரையினை மேற்கொள்ளும் யாத்திரிகராகிய ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள முடியும் என்பதினை உணர்பு பூர்வமாக உணர்ந்து கொள்ளமுடியும்..

இவ் வகையில் கதிர்காமக் கந்தனின் யாத்திரை பற்றி அடியேன் அறிந்த விடயங்களினைச் சுட்டிக்காட்ட வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. எம் முருகப் பெருமான் சூரபத்மனை வதம் செய்வதற்காக அகோர நிலையில் விடப்பட்ட அம்பானது பல இலட்சக் கனக்கான அம்புகளாக பிரிந்து மலைக் குன்றில் மோதிப் பிளந்து பல்லாயிரக் கணக்கான குன்றுகளாக எறியப்பட்டது. இவ்வாறு அமையப்பெற்ற மலைக் குன்றுகளே தற்போது எம் பெருமான் அமர்ந்துள்ள திருத்தலங்களாக காணப்படுகின்றது. (இக் கதையானது அப்பாசுவாமியுடனான யாத்திரைபற்றிய சம்பாசனையில் எனது மனதில் தோன்றிய எண்ணத்துக்கு அவரால் கூறப்பட்டவையாகும்) எமக்கு அருள் பாலிக்கும் எம் பெருமானை நோக்கிய யாத்திரையானது இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக அமைந்து காணப்படுகின்றது. ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்க யாத்திரையானது பல ஆண்டுகள் குரு வழி முறையில் இடம் பெற்றுவந்துள்ளமையினை அறிய முடிகின்றது. இவ்வகையில் அப்பா சுவாமியின் தலைமையில் இவ் வருடத்துடன் 50ஆண்டுகளினை பூர்த்தி செய்கின்றது. அதற்கு முன்பு சடையப்பா சுவாமிகளினால் பன்னிரண்டு வருடங்கள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதற்கு முன்பாக சடையப்பா சுவாமியின் குருவான வந்தாறுமூலையில் சமாதி அடைந்த லமன குரு பாபா சுவாமி அவர்களால் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த வகையில் நோக்கும் போது ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரையானது குரு வழிகாட்டல் மூலமான யாத்திரையாக அடியேனால் உணரமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங் குறிப்பிடப்படுகின்ற 50 வருடங்களுக்கு முற்பட்ட யாத்திரையானது யாழ்பாணம் செல்வச்சன்னிதியிலிருந்து வேல் சுவாமி தலைமயிலான குழுவினரும், வெருகலம் பதி மாணிக்கம் சுவாமி தலைமையிலான குழுவினரும், தாந்தாமலை கோணாமலை மற்றும் பிள்ளையான் சுவாமிகள் தலைமையிலான குழுவினரும், சித்தாண்டி, ஆரையம்பதி சுவாமிகளும், மயிலப்பா சுவாமிகளும், சடையப்பா சுவாமியுடன் இணைந்து மாமாங்கீஸ்வரர் ஆலயத்தில் இருந்து யாத்திரையாக கதிர்காம கொடியேற்றத்துக்கு செல்வது மரவாகியிருந்தது. இவ்வேளையில் இச் சுவாமிமார்கள் ஊர் ஊராக சென்று 11.00மணிக்கு முன் யாசகம் (பிச்சை) பெற்று அதனை கொண்டு ஆகாரம் செய்து அருந்துவது மரபாக இருந்து வந்துள்ளது.

இவ்வகையில் செஞ்சடைப் பெருமான் சற்குருநாதர் சடையப்பா சுவாமிகள் அவர்களினை முருகப் பெருமான் ஆட்கொண்டமையினால் அதாவது எமது சைவசித்தாந்தப்படி பதி (இறைவன்), பசு (ஆன்மா அல்லது உயிர்) பாசம் (ஆணவம், கன்மம், மாயை) என்பவற்றில் பதியாகிய முருகப்பெருமான் பசுவாகிய சற்குரு நாதர் சடையப்பா சுவாமி அவர்களை அவரின் கன்ம வினைப் பயன்படி இப் பூவுலகில் அவதரித்து வினைப்பயனினை அனுபவிக்க வைத்து, ஆணவத்தினை நீக்கி பணிசெய்தமையினால் மாயையாகிய இவ்வுலக காட்சிகளினையெல்லாம் யாத்திரை மூலம் காண்பித்து, இறையன்பு மூலம் பதியும், பசுவும் ஒன்றென்பதை காட்டியுள்ளார். இதனால் தனது பணியினை இறை சித்தப்படி திராய்மடு ஆச்சிரமத்திலையே எம் பெருமானுக்கு ஆலயம் அமைத்து இறைவனும் தானும் (பதியும் பசுவும்) ஒன்றறென வாழ்ந்து தனத பணியினை ஒழுங்கமைத்து இருவகையில் இன்றுவரை செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தர்சனத்தை அடியேனால் உணர முடிகின்றது..

இற்றைக்கு 49 வருடங்களுக்கு முன் தன்னுடன் அப்பா சுவாமி அவர்களை யாத்திரைக்கு அழைத்துச் சென்று அனைத்து ஒழுங்கு முறைகளினையும் அனுபவ ரீதியாக கற்பித்து விஜயனுக்கு விசியமனைத்தும் தெரியும் என்று கூறி ஒப்படைத்துள்ளார். இந்த வகையில் அப்பா சுவாமி அவர்களுக்கு சற்குரு நாதர் அவர்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப பல பெயர்களினை சூட்டியும் வந்துள்ளார். துடிதுடிப்பாக யாத்திரை செய்தமையால் விஜயன் என்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் குளப்படி செய்தமையால் சிங்கன் என்றும், அப்பா ஸ்தானத்தில் யாத்திரையினை கொண்டு நடத்தியமையினால் விஜயப்பா என்றும், சுவாமி மார்களுக்கு எல்லாம் அப்பா ஆனபடியினால் சுவாமி அப்பா என்றும், சுவாமியாக ஆக்கப்பட்டமையினால் அப்பா சுவாமி என்றும், அழைத்துள்ளார். செஞ்சடைப் பெருமான் சற்குருநாதர் சடையப்பா சுவாமிகள் வழியில் அப்பா சுவாமி அவர்கள் தொடர்கின்றார். அவர் காட்டும் வழியில் யாமும் தொடர்வோமாக.

செஞ்சடைப்பெருமான் சற்குருநாதர் சடையப்பா சுவாமிகளினால் உருவாக்கப்பட் திராய்மடு முருகன் ஆலயமும், ஆச்சிரமமும் ஆகும். இவற்றிற்கு தர்ம சாசன உயிலின்படியும், ஆச்சிரம தர்மப்படி ஆரம்பகால தர்மகத்தாவாகவும், பிரதம குரு வாகவும் செஞ்சடைப் பெருமான் சற்குருநாதர் சடையப்பா சுவாமியும், அவருக்கு உதவியாக இறை தொண்டர் வைகுந்தராசா அடியார் அவர்களும் இருந்துவந்துள்ளனர். சற்குரு நாதர் அவர்கள் 1992ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24 ம் திகதி பசுவும் பதியும் ஒன்றென உணர்த்தி சமாதி அடைந்தார். அதனைத் தொடர்ந்து தொண்டர் வைகுந்தராசா அடியார் அவர்கள் தர்மகத்தாவாகவும், பிரதம குரு வாகவும், அவருக்கு உதவியாக குமரன் சுவாமி அவர்களும் இருந்துவந்துள்ளனர். அவ் வேளை சற்குருநாதர் சடையப்பா சுவாமிகளின் வழியில் தொண்டர் வைகுந்தராசா அடியார் 2013ம் ஆண்டு 02மாதம் 13ம் திகதி இறைபதம் அடைந்தார். தற்பொழுது உயர் திரு தொண்டர் வைகுந்தராசா அடியார் அவர்களின் புதல்வர்களான குமரப்பா சுவாமி (மாணிக்கேஸ்வரராசா) அவர்கள் தர்மகத்தாவாகவும், பிரதம குரு வாகவும், அவருக்கு உதவியாக சகோதரரான தொண்டர் பிரதீபன் குருக்கள் அவர்களும் இருந்து செஞசடைப் பெருமானின் தர்ம சாசனப்படியுடம். குரு சீடர் ஒழுங்கு முறையிலும் தொடர்கின்றனர்.

இவ்வாறான சிறப்பு மிக்க யாத்திரையில் இணைந்து கொள்வதற்காக மூத்த தொண்டர் பிரபாகரன் அடியார் மூலம் என்னால் கடந்த 5வருடங்களாக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எம் பெருமானின் ஆசிர்வாதம் கிடைக்கப் பெறவில்லை. இவ் வகையிலே 2012ம் ஆண்டு எனது அலுவலக அதிகாரி இ.ஜதீஸ்குமார் அடியார் அவர்களுடன் ஆரம்பிக்க எம் பெருமான் அருள் கிடைக்கப்பெற்றது. யாத்திரை மாமாங்கீஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கும் அன்று காலை அடியேனும் அங்கு சென்றிருந்தேன். எனது இவ் யாத்திரைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மூத்த தொண்டர் பிரபாகரன் அடியார் அவர்கள் ஒரு தேவையின் நிமிர்த்தம் அப்பா சுவாமி அவர்களை அறிமுகம் செய்துவைத்திருந்தார். ஆனால் அன்றைய தினம் அப்பா சுவாமியின் தலைமைத்துவத் தன்மையும், அவரின் உறுசுறுப்பான அந்த நடையும் இன்றும் என் மனக் கண் முன் இருந்து கொண்டே உள்ளது. இவ்வகைப் பெருமை மிக்க ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்க யாத்திரையுடன் ஒவ்வொரு அடியார்களும் இணைந்து எம் பெருமானின் பேரின்ப பெருவாழ்வு பெற்றேகுமாறு வேண்டுகின்றேன். மேலும் குரு முறையில் வந்த இப்பாடலினை அப்பா சுவாமி அவர்களால் அடியேனுக்கு போதிக்கப்பட்ட பாடலினை உங்கள் முன் பகிர்கின்றேன்..

ஏழு மலை மீது வாழும் முருகேசனே
ஏழைக்கு இரங்கும் ஐயா.....

ஏத்தனைதான் சொன்னாலும் சத்தி உமை பாலனே
இன்னமும் மனம் இல்லையா....
சுழு துரை கடல் மேல் துயில் மால் மருகனே
சூர சங்கார வேலா....

சுந்தரா நந்தனே எங்கள் வினை போக்குவாய்
சுப்பிர மணியக் கடவுளே....
நாளும் மரு காவலன் ஏழை துயர் தீர்திடும்
நாராயனன் மருகனே....

நம்பினேன் உந்தனை எங்களை காத்திடும்
நடனமிடும் சிவன் மைந்தனே....
மைக்கரும் குழல் அலைய மாது திரு பாகனே
மாங்கனிக்கு அலைந்த முருகா....

மகிமை தரும் கதிரமலை நகரிலே உறைந்த தெய்வமே
பால சுப்பிரமணிய கடவுளே....

"அரோகரா"

வளர்க சற்குரு நாதர் பணி.
வாழ்க ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்க யாத்திரிகர்கள்.


"சுபம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பேராலயம் வருதல்



ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பேராலயத்தில் மாலை அணிதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புராணம் கூறும் பாதயாத்திரை

மனிதனாகப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் வாழ்க்கைப் பயணத்தைச் செய்து கொண்டிருக்கின்றோம். இவ்வாழ்க்கைப் பயணத்தில் எமது இறுதி யாத்திரைக்கான நன்மை தீமைக்கான தேடலே தொடர்கின்றது. ஒவ்வொருவருடைய கர்ம வினைக்கேற்ப நன்மையான காரியங்களில் ஈடுபடுவதற்கு இறைவனால் எண்ணங்கள் தோற்றுவிக்கப்படுகின்றது. இவ்வெண்ணங்கள் எல்லோருக்கும் ஒரே கால நேரத்தில் ஏற்படுவதல்ல இப்பிறப்பிற்கான அமைதியின் தாக்கத்தால் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட வயதில், கனத்தில், சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்றது.

இவ்வெண்ணங்களால் தாக்கத்திற்குள்ளாக்கப்பட்டு உருவானதே பாதயாத்திரை என்று எண்ணத் தோன்றுகின்றது. இருந்தாலும் எல்லோருக்கும் இப்பலன் கிட்டுவதில்லை. அது அவரவர் பிராப்தம் என்று கொள்ளலாம்.

உலகத்தில் தோன்றிய மதங்கள் அறிவுறுத்துகின்ற அல்லது கடமையாகக் கொள்கின்ற பொதுவான விடயம் தலயாத்திரை என்பதாக இருக்கின்றது. அதிலும் இந்து மதம் பாதயாத்திரையை மிக மேலாக எடுத்தோதுவது இந்துக்களுக்கு புரியாத விடயமல்ல் அந்த வகையில் கதிர்காம பாதயாத்திரை மேல் வருவனவற்றால் புனிதம் பெறுகின்றது.

கதிர்காமத்திற்கான பாதயாத்திரை 18ம், 19ம், 20ம் நூற்றாண்டுகளில் ஏற்படுத்தப்பட்டது. அல்லது தோற்றுவிக்கப்பட்டது எனக் கொள்ளமுடியாது. புராண காலத்தில் முருகப் பெருமானாலேயே முதன்முதலாக தோற்றுவிக்கப்பட்டது. என்பது வேதவியாசகரால் எழுதப்பட்ட திருக்கைலாய புராணத்தில் கதிர்காம கிரிப்படலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான சான்றுகள் இன்றும் இருப்பதாகத் தோன்றுகின்றது.

சூரபத்மன் வதைப்படலத்தில் கஜமுகாசூரன் சிங்கமுகா சூரனைச் சங்கரித்த சுப்பிரமணிய கடவுள் சூரபத்மனுடைய மகேந்திராபுரியை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் புடைசூழ செல்கின்ற போது லங்கா தீவிலுள்ள கதிர்காம கிரி என்கின்ற காடு, மலை, கங்கை, சார்ந்த இடத்தைக் கண்ணுற்று விஷ்ணு, பிரம்மா, தேவர்களின் வேண்டுதலுக்கிணங்கி கதிர்காம கிரியில் எமகூடம் அமைத்து கதிர்காம நகரத்தை ஏற்படுத்தித் தங்கி மகேந்திரபுரியில் வாசம் செய்யும் சூரபத்மனை வதம் செய்ததாக கதிர்காம கிரிப்படலத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

சூரபத்மனுடைய சங்காரத்தின் பின் திருச்செந்துரை சென்றடைந்த சுப்பிரமணியக் கடவுள் தேவயானையை மணமுடித்து கதிர்காமகிரியினுடைய சிறப்பை தேவயானியிடம் கூற அவ்விடயத்தை காண வேண்டும் என்று தேவையானை வேண்ட மீண்டும் கதிர்காம கிரி நோக்கி யாத்திரை யொன்றைப் புரிகின்றார் முருகன் கடவுள்.

இந்த யாத்திரையில் தேவதத்தனால் உருவாக்கப்பட்ட மரங்களில் வானவர்கள் தேவர்கள் சூழ்ந்து வர எமது பெருமானாரும் தேவயானை அம்மையாரும் கடல் மார்க்கமாக இலங்கை வந்தடைந்த இடம் காங்கேயன்துறை என்று கதிர்காமகிரிப் படலத்தில் சொல்லப்படுகின்றது. முருகப் பெருமானுக்கு உள்ள பெயர்களில் காங்கேயன் என்பதும் ஒரு பெயராகும். காங்கேயர் வந்து இறங்கியதார். காங்கேயன்துறை எனப் பெயர் ஏற்பட்டதாகப் புராணம் கூறுகின்றது. அங்கே தங்கியதால் அங்கேயும் முருகன் ஆலயம் இப்போதும் இருக்கின்றது.

மீண்டும் யாத்திரை யை ஆரம்பித்து கடல் வழியாக மரக்கலங்களில் உகந்தைக் கடற்கரையை அடைந்து உகந்தை மலையில் தங்குகின்றனர். உகந்தையிலிருந்து கால் நடையாக கதிர்காமம் செல்வதாகத் தீர்மானித்து மரக்கலங்களின் கல்லாக மாற்றிவிட்டு கதிர்காமம் நோக்கி பாதயாத்திரையாகச் செல்கின்றனர். அவர்கள் பயணம் செய்த மரக்கலமே உகந்தைக் கடல்கரையில் தோணி கவிழ்ந்து கிடப்பது போன்ற தோற்றத்தையுடைய மலையை தற்போது காண்கின்றோம். இதற்குச் சான்றாக கதிர்காம கிரிப்படலம் உள்ளது. இந்த வகையில் நோக்குகின்ற போது கதிர்காமப் பாதயாத்திரையை முதல்முதலாக ஏற்படுத்தியவர் எமது முருகப் பெருமானே என்பது புலனாகின்றது. இதற்குப் பிற்பட்ட காலத்தில் கைலாய மலையிலிருந்து முருகப் பெருமானை தரிசிப்பதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகர் சுவாமிகள் திருப்பழனிக்கு வருகின்றார். முருகப் பெருமான் கதிர்காமம் சென்றுள்ளதாக அறிகின்றார். அங்கே நவபாசாணத்தில் முருகப்பெருமானுடைய உருவத்தை சிலையாகச் செய்து பிரதிஸ்டை செய்த பின் சுப்பிரமணியக்கடவுள் யாத்திரை செய்த வழியினாலேயே போகர் சுவாமிகளும் கதிர்காமம் நோக்கி யாத்திரை மேற்கொள்கின்றார். சுவாமிகள் யாத்தரை செய்ததும் இதே உகந்தையிலிருந்து யாவை வழியேயாகும். என கதிர்காம கிரிபுராணம் கூறுகின்றது. போகர் சுவாமிகள் கதிர்காமத்தில் தங்கியிருக்கின்றார். போகர் சுவாமிகள் உருவாக்கிய யந்திரமே தற்போதும் யானையில் ஊர் வலம் வருகின்ற பேழையிலுள்ளது என்கின்ற வரலாறு உள்ளதாக கொள்ளப்படுகின்றது.

போகர் சுவாமிகள் பிரதமர் சீடராகிய பாபாஜி சுவாமிகள், போகர் சுவாமிகள் தங்கியிருக்கின்ற கதிர்காமம் நோக்கி யாத்திரையை இதே வழியினூடாக கதிர்காமம் சென்றடைந்து போகர் சுவாமியுடன் தங்கிருந்து முருகப்பெருமானுக்கு கடமைகள் செய்து தரிசித்து பெரும் அற்புதங்கள் புரிந்து கதிர்காமத்திலேயே சமாதி அடைந்ததாக கூறப்படுகின்றது. இதற்குச்சான்றாக கதிர்காமத்தில் தெய்வயானி அம்மன் ஆலய வளவினுள் பாபாஜி சுவாமிகளுக்கு சிறிய ஆலயம் அவருடைய சமாதியிலேயே அமைக்கப்பட்டிருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறாக எம் பெருமான் முருகக் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டு போகர்சுவாமிகள், பாபாஜி சுவாமிகளாலும் பின் தொடரப்பட்ட யாத்திரையே எம் முன்னோராலும் எம்மாலும் மேற்கொள்ளப்படுகின்ற கதிர்காம பாதயாத்திரை என முடிவு கொள்ள ஏற்புடையதாகின்றது.

இதுவரை பாதயாத்தரை பற்றிப் பார்த்தோம் இனி கதிர்காம பாதயாத்திரையால் ஏற்படும் நன்மை பற்றி ஆராய்வோம்.

பாதயாத்தரை செய்வோரில் பல பிரிவினர் உள்ளனர். வேண்டுதலால், நேர்த்திகடன் செலுத்தல், கடமையாக மேற்கொள்ளல், பாவங்களைத் தீர்ப்பதற்கு, இயற்கையை ரசிப்பதற்கென வெவ்வேறுபட்ட நோக்கங்களில் பாதயாத்திரையை மேற்கொள்கின்றார். ஆத்மீக ரீதியாக சிந்திக்கின்ற போது கடவுளும் , தேவர்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்களும் சென்ற பாதையில் செல்கின்ற போது அகத்தினுள்ளே இறைவனை அறிகின்ற ஒரு நிலைப்படுகின்ற உணர்வு மேவிடுகின்றது.

விஞ்ஞான ரீதியாக நோக்குகின்ற வேளையில் நோய் தீர்க்கின்ற உடற்பயிற்சியாக வாழ்க்கை ஏற்படுகின்ற மனக்கிலேசங்கள் நீங்கி மனம் அமைதியடைய, ஆறுதலடைய பலதரப்பட்டவர்கள் பாதயாத்திரை செய்வதால் நாம் ஒன்றியிருக்கின்ற சமூக கலை கலாசார பழக்கவழக்கங்களை கொண்டவர்களுடன் ஏற்றத் தாழ்வின்றி பழகி சேர்ந்துண்டு சமுகமயமடைகின்ற வாழ்க்கைக்கு இசைவாக்கம் பெறுகின்ற தன்மை ஏற்படுகின்றது.

இயற்கை அனர்த்தங்கள் செயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்ற இன்றைய சூழலில் அனர்த்தங்கள் எதிர் கொள்கின்ற அனர்த்தங்களை தாங்கி அதற்கினங்கி சவாலாக வாழ்க்கையை கொண்டு செல்வதற்கான பயிற்சியை பெறுவதற்கான பயிற்ச்சிக் பட்டறையாகவும் கற்றுக் கொள்கின்ற கல்விக் கூடங்களாகவும் இப்பாத யாத்திரை விளங்குகின்றது என்றால் மிகைப்படுத்தலாகாது. ஏனெனில் பாத யாத்திரை செல்கின்ற போது காலை கடமை தொடக்கம் இரவு நித்திரை செய்யும் வரைக்குமாக செயன்முறைகள் உணவு பெறும் உண்ணும் முறைகள் எல்லாம் எமது சாதாரண வாழ்க்கைக்கு அப்பாற்பட்டபடி முறையாக செயல் முறையாக அமைவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும் அகதி முகாம்களில் அல்லது வனாந்தரங்களில் எவ்வாறு வாழ்க்கை சுமூகமாக கொண்டு செல்லலாம் என்கின்ற பாடத்தை புகட்டி நிற்கின்றது. இப்பாத யாத்திரையாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக கதிர்காம பாதயாத்திரை செய்கின்ற பாதையில் ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்துகின்ற அனுபவங்கள், அற்புதங்கள் போன்றவை எண்ணிலடங்கா அத்தோடு அவை அனைத்தும் உணர்வு ரீதியான வாய்ச் சொல்லுக்கு அடங்காதவை என்பதே உண்மையாகும்.


**" பாதயாத்திரை செல்வோம் பாவம் பிணி தீர்ப்போம்"**

**- ஆறு ஜீவா -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராலயத்தில் ஆரம்ப பஜனை செய்தல்



குருக்கள்மட ஐயனார் கோயில் உணவு உட் கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத யாத்திரை

முருகப் பெருமானை குறிஞ்சிக் குமரன் என்றே கூறுவர். இவரது அறுபடை வீடுகளான

Ψ **பழனி**

Ψ **பழமுதிர்சோலை**

Ψ **திருவேரகம்**

Ψ **திருத்தணிகை**

Ψ **குன்றுதோறாடல்**

Ψ **திருப்பரங்குன்றம்** இதனோடு ஏராவது படைவீடு **ஈழத்துக் கதிர்காமமாகும்**. இவையாவும் மலை சார்ந்த இடங்களேயாகும். ஆதிகால மனிதனும் மலையும் சார்ந்த குறிஞ்சியிலே தான் தன் வாழ்க்கையைத் தொடங்கினான் என்பது வரலாறு. பின்பு படிப்படியாக காடு சார்ந்த முல்லையிரிந்து இறங்கி வயல் சார்ந்த மருதத்தில் தவழ்ந்து நெய்தலாகிய கடல் சார்ந்து பரவலானான். இறைவனும் மனிதனும் மலை சார்ந்த குறிஞ்சியோடே தொடர்புபட்டவர்கள் என்பது உண்மை அத்தோடு முருகப்பெருமானுக்கு தமிழ் கடவுள் என்ற பெயர் வந்தது. தமிழ் கடவுள் என்று முருகப்பெருமானை அழைப்பதால் முருகப்பெருமானோடு ஒன்றறக் கலந்து நின்ற இனம் தமிழினம் என்பது தெள்ளத் தெளிவாகி விட்டது.

ஆதி காலத்தில் மகரிஷிகள், சித்தர்கள் மலைச்சாரலை ஒத்த பெரு வனாங்களே தவமியற்ற தகுந்த இடங்களாக அடையாளம் கண்டனர். உள்ளொளி காண்பதற்கும், இறை சக்தியை வலிமைப்படுத்தவும் இத்தகைய சூழ்நிலையே பெரிதும் பயன்படலாயிற்று. தவமியற்றி உதிக்கும் உயர்ந்த சிந்தனை அலைகள், அருள் சக்தியாக மாறி அமர்ந்த விடம், காலடி பட்டு திரிந்து வாழ்ந்த இடம் புனிதமாகிக் கொள்வதோடு, மண்ணோடு பதிந்தும் விடுகின்றது. இரண்டறக் கலந்தது மாத்திரமின்றி இந்த மகா ரிஷிகளை, ஞானிகளை அல்லது சித்தர்களை அடக்கம் செய்தவிடம் அல்லது அவர்களாகவே சமாதியான இடம் போன்றவைகளாய் மேலும் இறை வலிமை இந்த இடத்திற்கு வந்து விடுகின்றது. இவர்கள் தவமியற்ற அமர்ந்திருந்த மரம் அல்லது சமாதியான பின்பு ஞாபகப்படுத்த நட்டமரம் தல விருட்சமாகி விடுகின்றது. இவர்கள் நீராட அல்லது பரிமாற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனைப்படுத்தப்பட்ட நீர் நிலைகள், கேணி, ஆறு அல்லது கங்கை, குளம் தீர்த்தக் கரையாகிவிடுகின்றது.

சாதாரண மனிதனை ஒப்பிடுகையில் கூட பாவிக்கும் அல்லது பரிமாறும் பொருள், இடம், மனை, வாகனம் இவைகளில் கூட அவரவர் இயல்புக்குத் தக்க வகையில் ஒரு தொடுகை சக்தி பதிந்து விடுமென்பது உண்மை. ஒரு நோயாளி ஒருவரை சாதாரண ஆத்ம சக்தி உள்ள ஒருவர் தன் கையால் நோவுக்குரிய இடத்தை தடவி விட்டாலே சுகம் வந்து விடும். மாறாக ஆரோக்கியமான ஒருவரை ஆத்ம சக்தி இல்லாத தீயசெய்கைகளுக்கு அதிபதியாய் இருக்குமொருவர் தொட்டுவிட்டால் நோயாளியாக மாறிவிடுவார். இப்படி அவரவர் தன்மைக்கேற்ப இந்த சக்தி செயல்பட்டும் செயலிழந்தும் காணப்படும். அந்தக் காலங்களில் ஆத்மீக முனிவர்களின் காலடி பட்டு கல்லும் சாபம் நீங்கி உயிர் பெற்றது என்ற உண்மையுண்டு. வறண்டு கிடந்த வனத்தில் சில ரிஷிகளின் வரவால் மழை பொழிந்ததுமுண்டு. இன்றைய காலங்களில் கூட பெற்றோரின் காலில் பிள்ளைகள் வீழ்ந்து வணங்குவர். இரக்கத்தோடு பெற்றோர் இறைவனை நினைத்த வண்ணம் தன் பிள்ளையின் தலையைத் தடவி விடுவார்கள். அந்த தொடுதலின் மூலம் பிள்ளைகளின் தீய சக்திகளை தாங்கள் ஈர்த்து பிள்ளைகளை பரிசுத்தமாக்கிவிடுகின்றனர் என்பது காலத்தால் அழியாத உண்மையாகும்.

இராமபிரான் அணிந்த பாதரட்சைகளை வைத்தே அவர் மறைந்த பின்பும் ஆட்சி நடந்தது. ஆன்மீக ஒளி வெளிப்பட்டது மக்கள் வணக்கத்துக்குரியதாக்கிக் கொண்டனர்.

விக்கிரமாதித்தன் என்ற பேரரசன் நீதி, தர்மம், உண்மை உடையவராய் வாழ்ந்ததால் அவர் மறைவுக்கு பின்னும் இவரது சிம்மாசனத்தில் ஒளிப்பிரகாசம் வெளிப்பட்டது. எனவே இயல்புக்கு ஏற்பவே சக்திப் பரிமாற்றம் நிகழ்கின்றது என்பதற்கு இவைகள் ஒரு உதாரணமாய் எடுத்துக் கொள்ளலாம்.

ஸ்ரீமத் நாராயணர் இராமாயணத்தில் இராமர் என்ற மனித உருவோடு பாதம் பதித்த மாமாங்கம் போன்று, முருகப்பெருமான் மனித உருவோடு பாதம் பதித்து வள்ளி நாயகியோடு லீலைகள் புரிந்த கதிர்காமம், உகந்தைஅத்தோடு முத்துலிங்க சுவாமி, பால்குடிபாவா, பாலசுந்தரி அம்மா போன்றோரின் சமாதிகள் அந்த மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்து விட்டது. ஆத்மீகம் செறிந்து விட்டது. இறை தத்துவம் புகுந்து விட்டது எனலாம். இந்த ஆத்மீகம் நிறைந்த இடத்தில் அருள் பாலிப்பு முகமாய் அமைந்த தெற்கு வாசல் ஆலயமுகம் கொண்டது. இந்த புனித இடத்தை நோக்கி நாம் யாத்திரை தொடர்கின்றோம்.

## கடைப்பிடியுங்கள்

Ψ பாத யாத்திரையை தூய்மை நிறைந்ததாகக் கொள்ளுங்கள்.

Ψ பாத யாத்திரையின் போது நீங்கள் முருகா, வேலா, அரோகரா என்று சொல்லும் ஒவ்வொரு சொல்லும், இறைவனை அடைந்து கொண்டே இருக்கிறது என்பதை நம்புங்கள்.

Ψ பாத யாத்திரையின் போது அந்த அமிர்தமான பிரம முகூர்த்த வேளை பறவைகளின் இசை, பூத்த மலர்கள், முகிலிகைகளின் மணங்களையும் தென்றல் சுமந்து வரும் அந்த வேளை நம் மனதுக்கும் உடலுக்கும் மருந்தாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

Ψ ஒருவரை ஒருவர் சுவாமி என்று கீழ் படிவாய் பழகும் பழக்கத்தினை பாத யாத்திரையில் வலிமையாகக் கடைப்பிடியுங்கள்.

Ψ சமைத்த உணவை வரிசையாய் நின்று ஏற்ற தாழ்வின்றி இயலாதவருக்கு இயன்றவர் இரக்கமாய் காலடியில் கொண்டு கொடுத்துச் சாப்பிடுங்கள்.

Ψ இரவுத் தங்கல் இடங்களில் நெருப்புத் தீனா போட்டுக் கொண்டு, அந்த வெளிச்சத்திலே சிறப்பு வேல் எங்களை வழிநடத்திக் கொண்டு செல்லும். முருகவேலுக்கு பூசை செய்து, பஜனை பாடி, பரவசக்கூத்தாடி இறை லயப்பட்டு நடக்கும் நிகழ்வில் எல்லோரும் கலந்து கொள்ளுங்கள்.

Ψ மெய் வருத்தம், பசி தாகமிருந்தும் தோய்த்து குளித்து முழுகி, நெற்றி நிறைந்த திருநீறு பூசி, பஜனைப் பாட்டுக்கள் பாடி பக்திப்பரவசமடைவதை பாத யாத்திரை - யின் போது சைவர்களுக்கே உரித்தானதாய் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவியுங்கள்

Ψ பாத யாத்திரையின் போது இயற்கை வனப்புக்களைக் காணலாம். பறவைகளின் இசையொலியும், மயில்களின் ஆட்டமும், சூரிய உதயக் காட்சியும், யானை, மான் கூட்டங்களின் அணி நடையும், பாலை, வீரை, விளாம்பழங்கள் உண்ணவும் கிடைக்கும். நீர் நிறைந்த ஆறுகளில் குளித்து தோய்த்து செல்லுங்கள். இதில் முகிலிகை சாறுகள் நிறைந்திருக்கின்றன.

Ψ பாத யாத்திரையின் போது பல பிரசித்தி பெற்ற ஆலயங்களின் தரிசனம் கண்டு, உணவு உண்டு உறங்கிச் செல்வதை பெறுமதி மிக்கதாய் கொள்ளுங்கள்.

Ψ இளைஞர் யுவதிகளே! பாத யாத்திரையின் போது உங்களைத் தெரியாமலே பக்தி சேர்ந்து விடுகிறது. அதை வலுப்படுத்த அங்கே வரும் முதியோருக்கு மதிப்பளியுங்கள். பணிவிடை செய்யுங்கள். உங்களுக்குள் ஆத்மீகம் கனியும் வயது வரும் போது இந்த தொண்டுகளின் பலாபலன் உங்களை பரிபூரணமான ஆத்மீகம் நிறைந்த ஒரு அற்புத மனிதனாக்கி விடும்.

## உணருங்கள்

Ψ உழைப்பு, உழைப்பு என்று ஓயாமல் செயல்படும் உடலானது இறை சிந்தனையோடு சில நாட்கள் இருக்க வேண்டிய அவசியமும் இந்த உடலுக்குத் தேவையான தொன்றென்றால் பாத யாத்திரை பொருத்தமாகின்றது.

Ψ பக்தியே மனதுக்கு இதமானது. அதே வேளை சரீரத்தால் செய்யப்பட்ட தீவினைகளை சரீரத்தால் தீர்ப்பதற்கு ஏற்ற இடம் பாத யாத்திரையேயாகும். வாக்கினால், கண்ணால், கையால், மனதினால் செய்த பாவம் வாக்கினால், கண்ணால், கையால், மனதினால் தீரவேண்டும்.

Ψ பிறவிகளைப் புகட்டும் திருவாசகமானது புல்லாகிப், பூடாய், புழுவாய், மரமாகி, பல்மிருகமாகி, பறவையாய், பாம்பாய், கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லசுரராகி, முனிவராய், தேவராய்; என்று வகைப்படுத்தியும் காட்டி யுள்ளார் மாணிக்கவாசக சுவாமிகள். இந்தப் பிறப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனக்கண்ணால் பார்ப்பதற்கும், ஏனையவைகளை ஞானக்கண்ணால் உணர்வதற்கும் இந்த புனித பாத யாத்திரை களம் அமைத்து தருகின்றது என்பது தெளிவடைந்த உண்மை.

Ψ ஓங்கி உயர்ந்த காடு செறிவான முகிலிகைச் செடிகள், இவை மிருகங்களின் உரசலால் கசக்குண்டு நிற்கும் மணத்தை காற்று அள்ளி வந்து நம்மிலும் மோத விடும். பழுங்கள் நிறைந்த மரங்கள், குயிலின் குரலோசை, குருவிகளின் ரீங்காரம், மயிலின் ஆட்டம் நிறைந்த அற்புத வனம். இதனுள்ளாலே எங்கள் யாத்திரிகர்கள் காவியுடுத்து, உருத்திராக்கம் அணிந்து, வேத பாராயணம் செய்த வண்ணம் வெல்வர். ஆத்மீக முதிர்ச்சி பெற்ற யோகி போன்றவர்கள் மரத்தடியில் அமர்ந்து ஆழ்ந்த தியானம் செய்திருக்கிறார்கள். இதில் அவர்கள் கண்ட அற்புதங்களில் சூக்கும சரீரத்தோடு ரிஷிகள் நடமாடியதைக் கண்டு களிப்படைந்திருக்கிறார்கள். இதனை ஆரம்பகால பாத யாத் திரிகர் களோடு பகிர்ந்துரைத்துமிருக்கிறார்கள்.

ௐ பாத யாத்திரையின் போது அந்த அமைதியான அற்புதமான வனத் தில் சூக்கும சரீரத்தோடு ரிஷிகள் தவமிருப்பதாக ஆத்மீக வல்லுனர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கு இடையூறு விளைவிக்காத வண்ணம் நடந்து கொள்வதோடு அவர்களுக்கு விருப்பமான முருக நாமங்களையும், பாடல்களையும் நாம் சொல்லிய வண்ணம் செல்லுதல் வேண்டும். இதனால் அவர்களும் மகிழ்ந்து நமக்கு அருளுவார்கள் என்பதை மனதில் பதித்துக் கொள்ளுங்கள்.

ௐ பாத யாத்திரையின் போது பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும் பரவச நிலை அடைதல் வேண்டும். அந்தப்பாத யாத்திரை நெறிதான் ஆத்மீகத் துறையைநடைமுறைப்படுத்தும்.

ௐ பாத யாத்திரையின் போது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை, இறை அற்புதங்களை, தீராத நோய்கள் தீர்ந்ததை, அடைபட்டுக் கிடந்த பிற துன்பங்கள் உங்களைவிட்டு விலகியதை போன்ற கருத்துக்களை உங்கள் பிள்ளைகளோடும், உறவினர்களோடும், அயலவர்களோடும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

ௐ ஆசைகளுக்கு காரணமான உடல், உள்ளம் தற்காலிக இறை சுகத்தை பாத யாத்திரையில் பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ நூல்களைப் படிப்பதால் அறிவு பெறலாம். ஆனால் சில சந்தர்ப்பங்களில் இது குழப்பமடைந்து விடும். பாத யாத்திரையில் ஈடுபட்ட பிறகே தெளிவு வெளிப்படும். இவை கற்றோர், அனுபவசாலிகள் கண்டறிந்த உண்மை. இறைவனே மனிதனுக்குள் இருந்து காட்டிய பாதையாகும். பல்வேறு பட்டவர்கள் இங்கு ஒன்று கூடுவதால் பேச்சு, நடையுடை பாவனைகளை கூர்ந்து அவதானித்து இதை சமூக மயப்படுத்திப் பார்த்து ஏற்றால் போல் பழகும் தன்மையையும் இந்த பாத யாத்திரையில் கிடைக்கின்றது.

ௐ திருமுறைகளைப் படிப்பதால் கூட பக்தி நயம் உணரலாம், ஆனால் இறைவனை அனுபவ ரீதியாய் உணரும் பக்குவத்தை பாத யாத்திரையே கொடுக்கின்றது. மனதை வலுப்படுத்துகின்றது.

ௐ மன நம்பிக்கை, கவலை நீங்கி விட்ட உணர்ச்சி, சமூக ஈடுபாடு இம் மூன்று நிலைகளும் கதிர்காம பாத யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு தாங்களுக்குத் தெரியாமலேயே நடந்து விடுகிறது. அத்தோடு இப்படியான நம்பிக்கை, இன்ப உணர்வு, சமூக உணர்வு, சமூக ஈடுபாட்டோடு மனிதர்கள் ஒன்று சேர்ந்து எங்கே திரண்டாலும் அங்கே ஒரு பெரிய சக்தி அலை உருவாகும். நெறிப்படுத்தல், வலுப்படுத்தல், சந்தோசத்தின் வெளிப்பாடு, என்பன எண்ணாங்களின் வலிமையே என மனவியல் ஆய்வாளர்கள் ஆணித்தரமாக கூறியுள்ளார்கள்.

ௐ பாவ வினைகளின் மேல் நின்று கொண்டு பக்தி நோக்கி இறங்கும் போது, மனம் இலேசாகி விடுகிறது. இறுக்கம் தளர்கிறது. பாரம் குறைகின்றது. தெய்வம் என்ற இலக்கை நோக்கி பாத யாத்திரை செய்து கொள்வதால் அனைத்தையும் தெய்வத்திடம் ஒப்படைத்து விட்டோம் என்ற நம்பிக்கை ஏற்படுவதால் அடுத்த செயல்களில் பதற்றமின்றி செயல்பட முடிகின்றது.

ௐ பாத யாத்திரையை பக்குவமாய் முடித்துக் கொண்டவர்கள் ஆசை, காமம், குரோதம் என்ற உணர்வுகளிலும் செல்வம், தரித்திரம் என்றவினயத்திலும் ஆரோக்கியம், வியாதி நிலைப்பாடுகளிலும் தன்னை நிதானப்படுத்தி தன்னை தனக்குள்ளே தேடி, சில ஒய்வாமையான வேடிக்கைப் பொருள்களைக் கண்டு தெளிந்து ஆழ் மனதில் அமைதியுறுவர்.

ௐ தெரிந்தும் தெரியாமலும், சரீர ரீதியாகவும் மனோ ரீதியாகவும் நாம் பல பாவங்களைச் செய்கின்றோம். அதற்கு விமோசனமாக சரீர ரீதியாகவே செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறப்புப் பரிகாரம் பாத யாத்திரைக்கே உண்டு.

ௐ பாத யாத்திரை மனிதனை மனிதனாகக் காட்டும், அன்பை வளர்க்கும்.

ௐ ஆசைக்கு மக்கள் அடிமையாகி அலையும் இந்த நேரத்தில் கலியுக தர்மமாகிய பக்தி நெறியினைப் பிரயோகித்தே மக்களை வழிப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. அதற்கு பாத யாத்திரை ஒன்றே கருவியாகும்;; பாத யாத்திரையானது மக்களின் மனதைப் பயன்படுத்தி உள்ளத்தை செம்மைப்படுத்தும்.

ௐ பாத யாத்திரை என்று புறப்பட்டு, மாலையிட்டு, காவியணிந்த பின் யாத்திரிகளுக்குள் ஏற்படும் பக்தி நம்பிக்கை, சலனமற்ற மனத்தையும் பெரும் அதிசயமாகவும், ஆச்சரியமாகவும் காணலாம்.

ௐ மனிதனால் செய்யப்படுகின்ற தவறுகள், சலனம், சஞ்சலம், கோபம், கவலை இவைகள் பாத யாத்திரையால் புனிதமடையச் செய்கின்றது.

ௐ பேச்சுத் துணையில்லாமல் பயணம் செய்வது கஷ்டமான காரியம், ஆனால் மௌன விரதம் பூண்டு யாத்திரை செய்பவர்களையும் காணலாம். சில யாத்திரியர்கள் சர்வமும் அவனேயென தன்னை ஒப்படைத்து சரணாகதியடைந்து விடுவார்கள். இவர்களையும் பாத யாத்திரையின் போது காணலாம்.

ௐ பாத யாத்திரை மனிதனுக்குள் தெய்வத்தைக் காட்டும்.

ௐ பாத யாத்திரையை பக்குவமாய் முடித்துக் கொண்டவர்கள் எந்த விதமான சூழல்களிலும் தான் சாதாரணமாக பழகிக் கொள்ளும் திறன் கொண்டவர்களா -வார்கள்.

ௐ பாத யாத்திரையை வெற்றிகரமாய் முடித்த பின்பு எத்தனை கடினமான விடயத்தையும் சுலபமாய் வெற்றி கொள்ளலாம் என்பது அனுபவியலாளர்களின் கருத்தாகும்.

ௐ பாத யாத்திரையில் நல்லதே நடக்குமென்ற நம்பிக்கை கிடைக்கும்.

ௐ பாத யாத்திரை வாழ்வியல் ஞானத்துக்கு வலுவூட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியானம் பழகுவோம்

### ஆன்மீக வாழ்க்கை :-

நிலையற்ற இந்த உலகத்திலிருந்து விடுபடுவதாகிய மோட்சத்தையே நமது இந்து சாஸ்திரங்கள் வாழ்க்கையின் இறுதி இலட்சியம் என்று கூறுகின்றன. இதனை ஆன்மீக வாழ்க்கை மட்டுமே அளிக்க முடியும்.

### கடவுள் :-

இந்து மதத்தில் கடவுள் மூன்று நிலையில் விபரிக்கப்படுகின்றார். முதலாவதாக பிரம்ம நிலையில் உருவம் அற்றவராக உள்ளார்.இரண்டாவது நிலையில் உலகை படைத்து காத்து அழிப்பவராக உள்ளார். கால தேவைக்கு ஏற்ப மனித வடிவிலோ அல்லது வேறு வடிவிலோ இறைவன் அவதாரம் எடுப்பது மூன்றாவது நிலை.

### இஷ்ட தெய்வம் :-

எந்த தெய்வத்தை நாம் தியானிக்க விரும்புகிறோமோ அதனை இஷ்ட தெய்வம் என்கின்றோம்.சாதகனின் மனதிற்கு இயைந்த இந்த இஷ்ட தெய்வம் அவனது குல தெய்வமாகவோ அல்லது வேறு தெய்வமாகவோ இருக்கலாம்.

### குரு :-

ஜபம் மற்றும் தியானம் செய்வதற்கு ஒரு தகுதியான குருவிடமிருந்து மந்திர தீட்சை பெறுவது மிகவும் அவசியமாகும். குரு இறையனுபவம் பெற்றிருக்க வேண்டும். தூய வாழ்க்கை வாழ வேண்டும். சீடனிடம் பணிவு,முத்தியில் தீராத ஆர்வசம், பலனடக்கம், குரு நம்பிக்கை, கீழ் படிவு ஆகியன எதிர் பார்க்கப்படும் குணங்களாகும்.

### மந்திர தீட்சை :-

முந்திரம் என்பது அதனை ஜபம் செய்பவரை பாதுகாக்க வல்ல இறைவனின் திரு நாமமாகும். தீட்சை என்பது குரு சீடனுக்கு இம் மந்திரத்தை அளிக்கும் முறையாகும். மந்திர தீட்சை சீடனின் உடலையும் உள்ளத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மைப்படுத்தி அவனை தியானம் செய்வதற்கு தகுதி உடையவனாக்குவதனால் ஒவ்வொரு சாதகனும் இந்த புனித சமய சடங்கை மேற்கொண்டே ஆக வேண்டும்.

## தியானம் :-

1. உங்கள் இஷ்ட தெய்வத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும்.

2. தியானத்திற்காக ஒரு நாளில் இரண்டு நேரங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ( காலை 5.00மணி அல்லது 6 . 0 0 ம ணி மாலை 6.30மணி அல்லது 7.30 மணி ) முடிந்த வரை அந்த நேரத்தை தியானத்திற்கு ஒதுக்குங்கள்.

3. வீட்டில் ஓர் இடத்தை அதற்கென தேர்ந்தெடுங்கள். அது பூசை அறையாக இருய்யட்டும்.

4. அங்கு ஆசனத்தை விரித்து அதில் அமரவும். துலை, கழுத்து, முதுகெலும்பு ஆகியன நேராக இருக்க வேண்டும்.கண்களை மூடிக்கொள்ளவும்.

5. சூரியன், நிலவு,நட்சத்திரங்கள், மேகங்கள் எதுவும் இல்லாத எல்லையற்ற ஆகாயம் மங்கிய ஒளியில் இருப்பதாக சில நிமிடங்கள் கற்பனை செய்யுங்கள் இது உடல் உள்ளத்தை தளர்த்தி அமைதி வரும்.

6. உங்கள் உணர்வு மையத்தை இதயத்தில் எடுத்துச்செல்லவும். ஆங்கு செந்தாமரையில் உள்டள இஷ்ட தெய்வம் உயிருணர்வுடன் அமாந்திருப்பதாக எண்ணவும்.

7. மனமுருக பிராத்தனை செய்யவும். ஆமைதியான மனம் நம்பிக்கை,பக்தி,விவேகம்,பற்றின்மை ஆகியவற்றை கொாி பிரதிாத்திக்கவும்.

8. ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் இஸ்ட தெய்வத்தை தியானிக்கவும்.மனம் அங்கும் இங்கும் ஓடினாலும் அதை இழுத்து வந்து இஸ்ட தெய்வத்திடம் நிறுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பின்பு இஸ்ட தெய்வத்தின் நாமத்தை குறைந்தது 108 முறை ஜபம் செய்யவும். ஜபம் செய்யச் செய்ய மந்திரம் மேலும் மேலும் நல்ல பலனை அளிக்கும். ஜபம் மனதுக்குள்ளேயே செய்வது " மானஸ ஜபம் " இது மிகுந்த பலன் தரும். ஜபம் செய்யும் போது எண்ணிக்கையை கணக்கிட ஜப மாலையை உதவும்.

10. இப்போது மானசீக பூசை செய்யலாம். சுந்தனம்,பூ,ஊதுபத்தி, தீபம், நைவேத்தியம் ஆகிய ஐந்து பொருட்களால் செய்யப்படும்.
"பஞ்ச சோப சார பூசை" சுலபமானது. புற பூசைகளை மனதளவில் செய்வது மானசீக பூசை ஜபமாகும். தியானத்தின் பின் உடனடியாக எழுந்திருக்க வேண்டாம். தொடர்ந்து சிறிது நேரம் கீதை அல்லது ஏதாவது ஸ்தோத்திரங்களை பாராயனம் செய்யவும்.

## நிறைவு :-

தியானமும்.ஜபமும், மன கட்டுப்பாட்டையும், மன ஒருமைப்பாட்டையும். முன அமைதியையும் பெற உதவும்.
இருந்தாலும் தியானம் ஆழ்ந்து செல்லும் போது ஜபம் தாணாகவே தானாகவே நின்று விடும். மன ஒருமைப்பாடு இல்லாமலிருந்தாலும் ஜபம் அதிக எண்ணிக்கையில் செய்யப்படும் போது அது அமைதியையும். முன ஒருமைப்பாட்டையும், பெற உதவுமென்று அன்னை ஸ்ரீ சாரதா தேவி கூறியுள்ளார்.

காத்தமுத்து ஜெகநாதன்
கிராம உத்தியோகஸ்தர்,
கல்லடி,
மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொத்துவில் ஏற்றம் தாண்டுதல்



சந்நியாசி மலையில் தங்கியிருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகசித்தி

## உலகியல்

**இயற்கையே யாக்கை யிறைவனே யான்மா**
**உயிர்க்குல மோர்தொடர்பென் றுன்.**

இயற்கையாகிய ஐம்பூத சக்தியே யாக்கை, ஷேத்ரம் - பிரகிருதி, நிலைக்களன். அதை இயக்கும் சுத்தான்மாவே இறைவன் - அருளரசன் - ஷேத்ரஞ்ஞன். அவன் உயிர்க்குயிராயிருக்கிறான். அதனால் எல்லா உயிர்களும் ஒரே தொடர்பான சுத்தாத்ம நிறைவே. தத்வமசி - தத்வம்- அசி என்பது மந்திரம். தத் - அது - த்வம் - நீ - அசி ஆனாய். கோடி மின்விளக்குகளிலும் ஒரே மின்சாரம் ஒளிர்கிறது அதுபோல் கோடிக்கணக்கான உடல் உயிர்களில், ஒரே சுத்தான்மாவே தொடர்ந்து விளையாடுகிறது. இந்த விசுவாத்ம பாவனையே சிறந்த வழிபாடாகும். உயிரிலும் உலகிலும் ஒருமயம் காண்பதே யோகமுமாகும்.

**தற்பெருமைத் தம்பட்டந் தன்னுள்ளே யொன்றுமிலை**
**அற்பமதி யாணவமே யாம்.**

தன் பெருமையை ஒலிக்கும் தம்பட்டம் உள்ளே வெறுமை, லொடலொட்டை, அற்பத்தனமான காரியங்களைச் செய்யும் சிறுமதி, ஆணவச் சரக்கு நிறைந்த வீண் மூட்டை. தம்பட்டம் உரத்த சத்தம், உள்ளே காலி; தற்பெருமை பேசுவோன் தனக்கு இல்லாத சிறப்பை இருப்பதாகப் புறையடித்துப் போலிப் புகழ் தேடுகிறான். உள்ளே அவன் வெறுங் குடுக்கைதான்.

நிறைகுடம் தளும்பாது. தம்மைப் பற்றிச் சான்றோர் புகழார். வீர அனுமான் போலப் பணிந்து நடப்பர். வெற்றுரை பேசும் அற்பமதியாளன் மூளை ஆணவ மூட்டை. அதை அவிழ்த்தால் அகங்காரச் சரடுகள் தவிர வேறிரா.

**கற்கண்டு போற்பேசிக் காணாது தீவைப்பார்**
**மற்கொண்ட மாற்றா ரிற் கேடு.**

முன்னே கற்கண்டு போல முகமன் பேசி, பின்னே காணாதபோது கோட்சொல்லிப் பகைத்தீயைப் பற்றவைக்கும் வஞ்சகர், போர்புரியச் சேனை கொண்டு வரும் பகைவரை விடக் கேடாவர்.

திறந்த பகை எளிது; கரந்த பகை கொடிது. புதர்ப் புலி பொல்லாதது. வாள்போற் பகையினும் கேள்போற் பகை கொடிது. துணைவன் போன்று நடித்துத் தூங்கும் போது கல்லைத் தூக்கிப் போடும் தீயரை விலகுக. நயவஞ்ச நரிகளின் தாத்தேனில், ஈ போல் விழாமல் தப்புக!

இச்சகம் பேசும் பச்சைப்புளுகர், முன்னேமெச்சிப் பின்னே திரி வைப்பர், சிண்டு முடிப்பர். வில்போல் வணங்கிக் கணை போற் கொல்வர். வஞ்சகர் முகமன் நஞ்சினுங் கொடிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள்

**ஓங்கார மாகி யொளியா யுயிர்க்குயிராய்**
**நீங்காதான் இன்ப வழ்வு.**

நம்முடன் நீங்காது என்றும் இருக்கும் கடவுள். இன்பமயம் ஓங்கார ஒளி அதுவே உயிருக்குயிராய் நிக்கும் சுத்தான்மா இறைவன் சுத்தபரமாத்மன் ஓங்கார ஜபத்தாலும் ஒளியை தியானிப்பதாலும் உள்ளே உயிருக்குயிராய் உணர்வதாலும் அவனை இன்ப நிறைவாக அனுபவிக்கலாம். எல்லா உலகும் அவன் உடமை அவனுக்கே உரிமை எல்லாம் அவன் ஆணையால் நடக்கின்றன. அனைத்தும் அவனே அவனின்றி அணுவும் அசையாது அவன் எல்லாருக்கும் பொதுவானவன். அவனை அடைய எல்லோருக்கும் உரிமையுண்டு. அனைத்திலும் ஒன்றை காண்பதே அறிவு.

## அருள் விளக்கம்.

ஞானஜோதியான் இறைவன். அருளாகிய கதிரைப்பரப்பி எங்கும் நிறைந்திருக்கிறான். அந்த நிறைவை எப்போதும் நினைக்க உலகத்தில் தியானத்துக்கும் ஞானத்திற்கும் ஏற்ப பொதுப்பொருள் சூரியன் கதிர் அவன் கதிரவன் சூரியன் தன் கதிர்களைப் பரப்பி உலகைச் சித்தரிக்கின்றான். உலகிற்குப் பற்றற்ற சாட்சியாயிருக்கின்றான். அவ்வாறு கடவுளும் பற்றற்ற சாட்சியாயிருந்து அருட்சக்திக் கதிர்களால் எங்கும் நிறைந்திருக்கின்றான். இந்தப் பூரணநிறைவை எப்போதும் தியானிக்க வேண்டும். கற்கண்டில் இனிப்பு இருப்பது போல, உயிர்களிலெல்லாம் சுத்த சச்சிதானந்த சக்தி நிறைந்திருப்பதை உணரலாம் ஆக்கல், காத்தல், அழித்தல், அடக்குதல் ,அருளல் ஐந்து கிருஷ்டித் தொழில்களும் இயல்பாகவே நடக்கின்றன. கதிரவன் உதித்ததும் மொட்டு மலர்கிறது. தேன் ஊறுகிறது. வண்டுகள் உண்கின்றன. வாடிய மலர் உதிர்கிறது. உதிர்மலர் மண்ணில் வீழ்கிறது. அதே மண்ணிலிருந்து மறுபடியும் செடி முளைக்கின்றது. இவற்றிக் கெல்லாம் சூரியன் சாட்சியாயிருக்கிறான். அவ்வாறே கடவுளும் பற்றற்ற சாட்சியாயிருந்து சக்தியால் உலகை நடத்துகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ள பொருள்

**பெயர் வழி வாதிய வாம் பேதங் கடந்த**
**வுயிர் பொருளொன் றுண்டென் றுணர்.**

நாம் பல பெயர்களைக் கேட்கிறோம், பல வடிங்களைப் பார்க்கின்றோம். அவை பல றேுபாடுகளையுடையன. ஆனால் இவற்றை கடந்த பரம்பொருள் ஒன்று உண்டு அதை உட்குவிந்த தியானத்தால் உணர்க. நட்சத்திரங்கள் பல, ஆகாயம் ஒன்று, பூக்களின் பெயர் வடிவுகள் பல, பூந்தேன் ஒன்று ஒரே சூரியனுக்கு, பல மொழிகளில் விதவிதமான பெயர்கள் விளங்கும். ஒரே மின்சாரத்தில் மணியடிக்கலாம், ஒளியேற்றலாம், விசிறி பாவிக்கலாம். சூடேற்றலாம், குளிராக்கலாம் பூமி ஒன்று அதில் உருவாகும் செடி கொடி, மரங்களின் இருந்து புளிப்பு, இனிப்பு, கசப்பு, என்று சுவை பல உள்ள பல பழங்களைக் கூட காணலாமல்லவா உருவங்களில் மனிதனாய் வாழும் நாம் பல்வேறு சமயம் மொழியில் வேறுபட்டும் நிற்கிறோமல்லவா, உலகங்கள் பலவானாலும் அனைத்தையும் ஆளும் சுத்த சக்தி ஒன்றே அந்த ஒன்றை அறிந்தால் மன வேறுபாடு தோன்றாது.

உலகத்தில் பல சமயத்தார் பலபல விதமான இறைவனைப் பற்றி சொல்லுகிறார்கள், ஆனால் உள்ள பொருள் ஒன்றே, இந்த ஒன்றையே ஈசுவரன் , அல்லா, பரமபிதா, யகோவா, சிவன், விஷ்ணு, என்று பல விதமாகப் பாவிக்கின்றார்கள் உள்ள பொருளையறிந்தால் பேத புத்தி நீங்கும் உயர்பரம் பொருளில் எல்லாம் ஒன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபாடு

**நேசம் பதிந்துள்ளே நின்றுருகி, நெஞ்சாரப்**
**பேசினாற் பேசும் பிரான்.**

உள்ளே நேசம் பதிந்து, அன்புறவு ஊன்றி நின்று, ஆர்வத்தால் உருகி, நெஞ்சாரப் பேசினால், அருட்பிரானாகிய இறைவனும் "இதோ இருக்கிறேன்" என்று ஓங்காரமாகப் பேசுவான்.

அன்பு, ஆர்வம், நேசம், உருக்கம், உள்ளுறவு, உள்ளுணர்ச்சி, உள்ளறிவு, உள்ளொளி, உட்கலப்பு, உள்ளின்பம் - சித்தசுத்தியுடன் இறைவனுக்கு உள்ளே முறையிடுவதால் இன்பநிலைகள் மேன்மேலும் படிப்படியாக அனுபவமாகும். "அருட்பரஞ்சுடரே! அகநாடகனே! அகத்திரை நீக்கி அறிவொளி காட்டாய்! கனியும், சுவையும், கனலும் ஒளியும், மலரும் மணமும், மதியும் நிலவும் போல இணை பிரியாது என்னுள் இருக்கும் இறைவா! என் உடல் உயிர், மனம், உள்ளம், அறிவு, இன்பம், உணர்வு, உண்மை, பேச்சு, நினைப்பு, முயற்சி, செய்கை எல்லாம் உன் மயமாகி நின்னிச்சை புரிந்து, நின்னிற் கலக்க அருள் தூய்மை, வாய்மை, பொறுமை, அன்பு, அடக்கம், நேர்மை, உறுதி, ஆண்மை, அறிவு, தொழில்முயற்சி, அருட்பொலிவு இவற்றுடன் யோகத்தால் உன்னைக் கலந்து வாழ அருள் என் மனச்சாட்சியில் பேசி, என்னை நின்பால் நடத்து. ஓம் சுத்த சக்தி" இவ்வாறு நெஞ்சம் பேசுக.

## அறிவியல்

**போக்குவர வற்ற பொருளான்மா நானதுவென்**
**றேக்கமற் றின்புற் றிரு.**

மனிதா! நீ எப்போதும் இன்புற்றிரு, அதற்கு ஏக்கமற்று அச்சம் கவலை தளர்வற்று, உள்ளத்தில் உள்ளபடியிரு, உள்ளத்தில் உள்ள அது, நித்திய நின்மல சுத்த சுதந்திராத்மா அதற்குப் போக்கு வரவு இல்லை. இறப்பும் பிறப்பும் இல்லை. இளமை, முதுமை, இன்பம், துன்பம், இறப்பு, பிறப்பு, போக்கு வரவு எல்லாம் வினையுடலுக்கே. ஆடை கிழிந்தால் ஆளுக்கென்ன? பழையது கிழிந்தால் புதியது பெறுவோம். உடல் போனால் உடல் வரும். உள் மனிதன் என்றுமுள்ள சுத்த சச்சிதானந்தப் பொருள். அதையே "அது நீ (தத்வமசி") ("ஸோஹம்") நான் அவன் ("ஓம் தத் ஸத்") ஓங்காரமாகிய அதுவே உண்மை "சுத்தோஹம்" என்ற மந்திரங்களால் அருட்பெரியார் குறித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமை

**ஆற்றல் பொறையளவே யாகு மதனாலே
யேற்றம் பெறுமெங்கு மே.**

ஒருவனுக்கு எவ்வளவு பொறுமையுள்ளதோ, அவ்வளவே ஒரு காரியத்தைச் சாதிக்கும் ஆற்றலும் இருக்கும். உறுதியான பொறுமையால் ஒருவனுக்கு எங்குமே மேன்மை கிடைக்கும்.

அன்பிற்கு ஆர்வம் உள்ளம், ஒற்றுமை உயிர்ப்பு, உண்மை கரணம், கண்ணோட்டம் விழிகள், தியாகம் உடலம், பொறுமையே நரம்பு. ஆன்மநேய மென்னும் ஊற்றினின்று பொசியும் அருவியே அன்பு. அன்பின் வெற்றி பொறுமையாலெய்தும். படபடப்பின்மை, இடம் பொருளறிதல், காலமறிதல், கருத்திலுறுதி, உண்மைக்கு வெற்றி யுண்டென நம்புதல், அறிஞர்சொற் படிதல், அகந்தையின்மை, போட்டி - பொறாமை - பொய் - சினமின்மை, பகைவரின் வஞ்சத் தூண்டலிற் படாமை, வீழினும் ஓங்கினும் விடாமுயற்சி, இடர்களை வெற்றிப் படிகளாய்க் கொள்ளல், பகைவரைப் பகையாது பழுதைத் திருத்தல், ஆன்ம நிச்சயம், அஞ்சாத் துணிவு, போன்றவரினும் புன்னகைப் பொலிவு, எல்லாருக்கும் இன்பமே நினைத்தல் – இவையே பெறுமையின் இலக்கணமாகும். பொறுமையே வெற்றிப் பொன்முடி சூடும்.

# வாய்மை

**பயனுள கூறும், பழிபகையைப் போக்கும்
நயனுள நாவி னலம்.**

"நயம்" என்றால் நன்மை, இனிமை, அன்பு, அருள், எனப் பொருளாம். நயமுள்ள நாக்கு, பயனுள்ள சொற்களையே பேசும் பிறரைப் பழிக்காது பகை பேசாது.

மலரை மணத்தால் அறியலாம். மனிதனைப் பேச்சால் அறியலாம். மனத்தின் ஒலிப்பரப்பியே வாய், நாக்கு இனியதையேற்றுக் கசப்பையுமிழ்வது போலவும், ரசத்தையேற்றுச் சக்கையைத் துப்புவது போலவும், இனிமையே பேசிக் கடு மொழிகளை விலக்க வேண்டும். பிறர் பேச்சில், சாரத்தைக் கெண்டு, வீணான சக்கையை ஒதுக்கவேண்டும். சொல் ஆக்கும், அழிக்கும் துயரை நீக்கும். அறிஞர் சொல்லே உலகையாளுகிறது் மனித சமூதாயத்தை நடத்துகிறது் நாகரிகத்தை அமைக்கிறது. சொல்லின் உயர் திறனே மந்திரம், **வேதம்!** மாங்கல முரைத்தல் வாய் மொழிக்கழகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியல்

**அன்பே கடவுளா மன்பே யருஞ்சமயம்**
**அன்பே யறிவின்றி கனி.**

உலகம் உயிர் இறை எல்லாம் அன்பின் விளக்கம் அன்பின் உச்சமே கடவுள். அறிவின் விளக்கம் அன்பு. அன்பின் முதிர்ச்சி அறிவு. மாசற்ற அன்பிருந்தால் அருள் பிறக்கும். அருள் கடவுளைக் காட்டும் உலகிலுள்ள சமயங்களெல்லாம் அன்பையே உயிராகக் கொண்டவை. அன்பே சமய சாரம். அன்பே அறிவிற்கு அணி. அறிவாளியை அன்பினால் அறியலாம் உலகமே அன்பினால் நடக்கிறது. காதல், நட்பு, பக்தி, அருள், ஈகை, இரக்கம், ஒற்றுமை, கலையின்பம் எல்லாம் அன்பினால் வளர்கின்றன. காதலர் அன்பு, இல்லறத்தை நடத்துகிறது. இல்லற வாழ்க்கையே அன்பினால் உலக வாழ்க்கையாக விரிகின்றது. குலமே குவலயமாகின்றது. உயிரன்பு, உலகன்பு, இறையன்பு என்று அன்பு விரிந்து பரவுகிறது. அன்பு புறம் போந்து, பெயர் வடிவ பேதங்களை அளாவுகிறது. அன்பு உட்குவிந்து உள்ளத்தில் அருவான இறைவனை உணர்கிறது.

**சுமையுமெளி தாகுஞ் சுடுபகைநட் பாகும்;**
**நமனும்போ மன்பை நயந்து.**

அன்பின் சக்தியால் பெரிய சுமைகளைக்கூட எளிதாகத் தூக்கி விடலாம். (தாய் குழந்தையைத் தாங்குவது போல்) நம்மைச் சுட வரும் பகையும் நட்பாகும். அன்புள்ளத்தை நயந்து, வந்த எமனும் திரும்பிச் செல்வான். அதாவது அன்பு சாவையும் வெல்லும். அன்பின் உள்ளம் அமைதியின்பம் அடையும். அப்போது நரம்புகளெல்லாம் படபடப்பில்லாமல் நிதானமாக நடக்கும். மூச்சு சமனாகும். அன்பே யோகப்பயிற்சியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உகந்தை காடு பிரவேசித்தல்



உகந்தை காட்டு வழியால் செல்லுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னாது செய்யாமை

**மனத்தி லிரக்கமிலா மக்களை மாக்கள்**
**இனத்தினுஞ் சேர்த்த லிழுக்கு.**

நெஞ்சில் ஈவிரக்கமற்ற மாந்தரை விலங்கினத்தினும் சேர்த்தல் தவறாகும். ஆடு மாடுகள் மனிதனுக்கு எவ்வளவோ உதவி செய்கின்றன. மனிதன் அவற்றை வதைத்துண்ணல் கொடுமை. பாம்பு புலி கரடிகள் கூட, பழக்கினால் அடங்கி நடக்கும் மனப்புலி, வஞ்சநரி, பொறாமை நாய், காமப்பன்றி - மனிதனை விலங்கிலுங் கேடாக்கும். இரக்க மற்ற மனிதன் வாயில்லாவுயிர்களை வதைக்கிறான்! கொடுமை!

**கதறக்கொன் றூனுண்ணுங் காதகர்க்கே தன்பு?**
**மதுவுண்பார்க் கேது மதி?**

கதறக்கதற உயிர்களைக் கொன்றுண்ணும் கொலையாளிகளுக்கு அன்பு எப்படியிருக்கும்? மதுவுண்டு மயங்கினவருக்கு நிலைத்த மதி ஏது?

மது மதியைக் கெடுக்கும் ஊன் உயிரைக் கெடுக்கும். ஊனுண்ணல் இன்றேல் உயிர்க்கொலையில்லை. மனிதர்க்கு உரியது மரக்கறியுணவே. உதிர்கனி தானியம் உத்தமவுணவு. அவற்றையும் அளவுடன் உண்ணல் வேண்டும். ஓருணர்வுள்ள தாவரம் விடுத்து, ஐயுணர்வுள்ள ஆருயிரைக் கதறகதறக் கொன்றுண்ணல், இரக்கமற்ற அரக்கத்தனமாகும். கொன்றவன், கண்டவன், விற்றவன், கொண்டவன் உண்டவன் அனைவரும் கொலையில் பங்கு கொண்டவர் போர்க் கொலைகள், ஆட்கொலை, பொங்கற்கொலைகள், கேள்விக் கொலைகள், மதவெறிக் கொலைகள், வயிற்றிற்காக வன்கொலை புரிதல், இரத்தச்சோறு, பாபப் பொங்கல் எல்லாம் ஒழிக! அன்பு பொழிக! ஊன் மது விலகுக, உயிரன்பிலகுக!

**கூற்று மிடுகாடுங் கூடிய மாக்களே**

**நாற்றவுட லுண்ணு நரர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பிரிந்த பிறகு, நாறிய உடல்களையுண்ணும் நரமனிதர், உயிர்களைக் கொல்லும் எமனும், உடல்களை விழுங்கும் சுடுகாடும் கூடிய மிருகங்களே யாவர்.

மனிதன் சாவை அஞ்சுகின்றான் தானே பிறவுயிர்களுக்கு நமனாகிறான் தன்மேற் கத்தி பட்டால் "ஐயோ" என்கிறான் ஆயிரக்கணக்கான உயிர்களை வாளாலும், யந்திரங்களாலும் அறுத்துண்கிறான். சுடுகாட்டில் உறவினரைப் புதைக்கும் போது மனிதன் விம்மியழுகிறான் . தீங்கற்ற வுயிர்களின் பிணங்களை வாட்டி மசாலை சேர்த்து, வயிற்றுக் குழியில் போட்டு புதைக்கிறான்! ஆ கொடுமை!

காய் கிழங்கு தானியம் பருப்பு இவற்றால் ஆகிய உணவு எவ்வளவு ருசியாயுள்ளன! குடலும், குருதியும், கொழுப்பும், சதையும், மலமும் நாறும் கொலைக்களன் எவ்வளவு அருவருப்பாயிருக்கிறது! கொன்றுண்ணும் உயிர்களின் கண்ணீரும், கம்பலையும், பிணி துயர் இடும்பைகளும் சாபமும், உண்பவன் இரத்தத்திற் கலந்து வாழ்வைப் பற்றும். கொலை, கொலை தூண்டும் புலான் மறுத்தலே போர் நிறுத்தலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினைத்திறன்.

**மாமனிதன் தேவனெனும் வாழ்க்கைப் படிகளெலாம்**
**தாம்செய் வினையே தரும்.**

விலங்கு (மா), மனிதன், தேவன் என்னும் மூன்று வாழ்க்கைப் படிகள் உள்ளன் தாம் தாம் முயலும் வினையே அவற்றைத் தரும்.

அறிவிற்கேற்ற இயல்பு, இயல்பிற் கேற்ற நினைப்பு நினைப்பிற்கேற்ற செய்கை, செய்கைக்கேற்ற வாழ்க்கையுண்டாம்.

விலங்கு தாமதவியல்புடையன. மனிதன் ராஜஸவியல்புடையவன். தேவர் சாத்விக வியல்புடையவர்.

விலங்குகள் புலனறிவால் இரைதேடி யுண்டு, கூடிக்குட்டிபோட்டு வளர்த்து விட்டுவிடுகின்றன. அவை தமக்காக மட்டுமே வாழ்கின்றன.

மனிதன் பகுத்தறிவினால் நல்லது பொல்லது இன்னதென்றறிந்து, மனத்தால் நினைத்து தன்னுறுதியுடன் நடக்கவேண்டும். ஊண் உறக்கம், ஊடல் கூடல், ஈனல் பேணல்களையே கருதி , நலந்தீதறியாது நடக்கும் மனிதன், மனிதவிலங்கே யாவான். அன்பு, அறவுணர்ச்சி, ஈகை, ஒப்பரவு, தன்னலமறுப்பு, பொதுநலத் தொண்டு, வீரம், ஆண்மை, அஞ்சாத மெய்யுறுதி, ஆட்சி, நற்செயல் இவையெல்லாம் மனிதத் தன்மையாம்.

அடிமைப் புத்தி, மடமை, இரக்கமில்லா முரட்டுத்தனம், அன்பின்மை, பகைமை, கட்டுக்கடங்காத் காமவெறி, மேய்மதம், பேராசை இவையெல்லாம் விலங்குத் தன்மையாம். ஆண்மை கொண்டு அறத்தைக் காப்பவனே மனிதன்.

இவை:- யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களின் யோக சித்தி நூலி ல் இருந்து பெறப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறைத் தத்துவங்கள்

## முடி காணிக்கை

முடியை மொட்டையடித்து காணிக்கையாக்குவதிலும் மனிதன் மனமாற்றம் பெற்று இறைகருணை மிக்கவனாய் புது வாழ்வு வாழ வழிவகுத்துத் தந்திருக்கிறது சைவசமயம். முடியை வழித்து இறைவனை எண்ணிக் கொண்டு காணிக்கை யெனக் கூறி நீரில் விட்டு விட்டு நீராடி விட்டு மீண்டால் தீய செயல், எண்ணங்களை அழித்து நீரில் விட்டுவிட்டு புதிய ரோமங்கள் முளைப்பது போல புதிய செயல் எண்ணங்களை தோற்றுவித்து புதிய வாழ்க்கை வாழ்வதாகும்.

- முடி காணிக்கை என்பது இறைவனுக்கு பணிந்து நன்றி காட்டும் செயலாகும்.
- முடி காணிக்கை என்பது ஒரு காரியத்தின் தீரம் எனலாம்.
- முடி காணிக்கை என்பது ஒரு முழுமையான இறை அர்ப்பணிப்பாகும்.

## திருநீறு

சைவத்தோன் பிறந்து இறந்த பின் அவனது உடலை அன்றைய காலம் இடுகாட்டில் இடுவர். மனித நடமாட்டத்தில் இருந்து புறமான ஓர் பகுதியை அடையாளம் கண்டு அந்த காட்டினுள்ளே போட்டு விடுவர். அதை மிருகங்கள், பறவைகள் உணவாக தின்று விடும். திருவள்ளுவருடைய உடலை உண்ட காகங்கள் பொன்னிறமானது என்று வள்ளுவர் வரலாறு கூறும்.

இங்கே திருநாவுக்கரசு நாயனார் வாழும் காலத்தில் வணங்காதவரை பற்றி கூறுகையில் திருநாவுக்கரசு நாயனார் இறைவனை வணங்காது உடலுக்கு உணவு தேடி ருசி பார்த்து உண்டு கொழுத்து காகங்களுக்கு இரையாவதை உணர்த்துகிறார். இங்கேயும் இடுகாடு புலனாகிறது.

**பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்**<br>
**நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்**<br>
**ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து**<br>
**காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே**

ஆனால் பின்பு இடுகாடு சுடுகாடாக மாறி விறகிட்டு எரித்து அதன் சாம்பலை ஆற்றில், கடலில் கரைத்து விடுவார்கள் இதில் அனைவரும் ஏற்றதாழ்வின்றி சமமாகிக் கொள்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவது கண்டு பின்னும் மிந்த
பிடி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின அம்பலவர்
அடிசார்ந்து நாம் உய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே

– பட்டினத்தார். –

பூமியில் பிறப்பெடுத்தார் உடல் என்றோ ஓர் நாள் எரிக்கும் சாம்பலாகும். ஞானத்தீயில் உடல் எரிந்த பின் எஞ்சுவது சிவதத்துவமே என்னும் கருத்தை வெளிப்படுத்தி திருநீறு நெற்றியில் இடப்படுகின்றது.

## திருநீறு பெறுதல்

பசு மாட்டிற்கு அறுகம் புல்லை உண்ணக்கொடுத்து அதில்வரும் சாணத்தை எரித்து சாம்பலாய் பெறப்படுகின்றது. உடலில் உள்ள அனைத்து நரம்புகளும் ஒன்றினையும் நெற்றியிலே இது அணியப்படுகின்றது.நம்மை சுற்றியுள்ள அதிர் வலைகளை ஏற்கும் தன்மை திருநீற்றுக்குள்ளது உடலில் வலியுள்ள இடங்களில் பூசினால் வலியை சுகமாக்கும் மருந்தாகி கொள்கிறது.

திருநீற்றை மந்திரித்து அணிவதால் காற்றணைவு என்ற கெட்ட பேய் பிசாசு நம்முடலை விட்டு ஓடிவிடும்.

1. முடி சாந்தவரும் முடிவில் ஒரு பிடிச்சாம்பல் என்பதை உணர்த்துவதால் நாம் நிலையாமையை எண்ணி பிற உயிர்களில் அன்பு கருணையுள்ளவராய் திகழ்வோம்.களவு,பொய்,சூது என்ற கெட்டசெயலை வெறுத்து விடுகிறோம். வாழ்வில் வரும் ஏற்ற தாழ்வான உயர்விலும்,துன்பத்திலும் சலிப்புத்தன்மை உள்ளவர்களாய் மாறிக்கொள்கிறோம். உலக ஆடம்பரங்களை காட்சிப் பொருளாய் கண்டுணர்ந்து தெளிவடைகின்றோம்.

2. திருநீறு நோய் தீர்க்கும் நிவாரணியாகின்றது.
3. திருநீறு கெட்ட பிசாசுக்களை வெருட்டி எம்மிடம் இருக்கும் இறைசக்தியை பாதுகாக்கின்றது.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே

– திருஞானசம்பந்தர் –

என்பதால் முற்றிலும் இறைவனுக்கும் நமக்கும் இடையில் ஓர் இணைப்பை கொடுக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

### அரோகரா

ஹர என்ற சொல்லுக்கு பாவங்களைப் போக்குவது என்று பொருள். ஹர ஓ ஹர என்ற சொல் தமிழில் அரோகரா என்று வந்தது. சிவ நாமங்களில் அர என்ற சொல் உயர்ந்தது அரஹரா என்று இடையறாது உச்சரித்தால் நம் பாவங்கள் யாவும் தீயிலிட்ட பஞ்சு போல் எரிந்து ஒழியும்.

### கற்பூரம்

கற்பூரம் நெருப்பில் எரிந்து கரியோ சாம்பலோ இல்லாமல் மறைந்து விடுகிறது. அதுபோல் ஆன்மா இறைவனுடைய அருட்சோதியுள் கரைந்து ஒன்றுபட வேண்டும் என்றே கற்பூரம் எரிக்கப்படுகின்றது.


தீதணையாக் கற்பூர தீபமென நன் கண்ட
ஜோதியுடன் ஒன்றி குறிகறுப்பது எந்நாளோ

– தாயுமானவர் –

### தோப்புக்கரணம்

கரணம் என்றால் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவைகளைத் தோற்பது "**தோற்புக்கரணம்**" எனலாம்.விநாயகர் முன் இவைகளையெல்லாம் இழந்து தூய்மையடைய வேண்டும். என்றும் நாம் நமது தவறை உணர்ந்து வந்த காரியங்கள் நிறைவேற வேண்டும் என வேண்டுவதே தோப்புக்கரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குழுக்கனாறு அம்மன் ஆலயம் வழிபடுதல்



நாவலாறு தீனாக்கு விறகெடுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காயின் தத்துவம்.

கா்ம வினைப்பயனால் பிறவிகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இந்தப் பிறவிகளில் இருந்து விடுபடுவதே இறை வணக்கமாகும்.

மாதா உடல் சலித்தால் வல்வினையேன் கால் சலித்தேன்
வேதாவும் கை சலித்து விட்டானே – நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னல் ஓர் உன்னை
கருப்பையூர் வாராமல் கா.

– சிவவாக்கியர் –

வினை களைந்து பிறவாத இடமொன்றைத் தேடுவதே மனிதக் கடற்பாடாகும். இதனை எட்டுவதற்கு நம்மை பீடித்துள்ள மாயை மலம், கா்ம மலம், ஆணவ மலம் ஆகியவற்றை நீக்கிவிட வேண்டும் இதனையே சமய வழிபாடுகளும் போதிக்கின்றன. அதில் முக்கிய இடம் பிடித்துள்ளது தேங்காய்த் தத்துவமாகும்.

இறைவனிடம் இருந்து வந்ததே ஆத்மா ஆதலால் ஆத்மாவுக்கு இறை குண மிரு ந்தாக வேண்டும் ஆத்மாவை இறையென்றும் உயிர் என்றும் கூறுகின்றோம் இந்த இறையல்லது ஆத்மா "சித்த சுத்தி" என்ற களங்கமற்ற, பரிசுத்தமான வெண்மையான இதயத்துள் குடி கொண்டுள்ளது. இதை தேங்காய்த் தத்துவத்துடன் ஒப்பிடுகையில் வெண்சதையுடைய தேங்காயே சித்த சுத்தியாகும். அதனுள்ளேயுள்ள இளநீரே ஆன்மா அல்லது உயிர் மேலும் இறைவனாகும். பிரபஞ்சத்தின் வெளிப்பாட்டில் தன்னை முதன்மை படுத்தி காட்டும் மாயையானது தேங்காயில் மேல் தோல் தோலிலும் பல நிறமென கவர்ச்சிப்படுத்தி தன்னுள்ளேயே முழு ஆளுமையுமெனக் காட்டி நிற்கும் வினையை மேல் நார் அல்லது தும்பு மட்டை உணர்த்தும் இவைகளைக் களைந்து

ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது

– திருவருட்பயன் –

ஆணவத்தின் தன்மையினை தேங்காயின் ஓடு அல்லது சிறட்டை உணர்த்துகின்றது. இறைவனே எனக்கு மும் மலங்களையும் அகற்றி அருள் என்ற குறிப்பை தேங்காய் உடைக்கும் கிரியை உணர்த்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய தெங்கிலே இளநீர் சேர்ந்த காரணங்கள் போல்
ஐயன் வந்திங் கென்னுளம் புகுந்து கோயில் கொண்டனன்
ஐயன் வந்திங் கென்னுள்ளம் புகுந்து கோயில் கொண்ட பின்
வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்பது இல்லையே

– சிவவாக்கியர் –

## முடி தேங்காய்

முடி தேங்காயை கும்பம் வைத்து இறை எழுந்தருளியாய் கொள்வர். பூசைக்கு எடுக்கும் முடி தேங்காயை பூசையின் போது ஆணவம் என்ற ஓட்டை தகர்த்து மாயை கர்மமென்ற தும்பை அகற்றி அங்கே மூன்று கண்களைக் காண்பர். இரண்டு கண்கள் ஊனக்கண்ணாய் நின்று உலக ஆசா, பாச, உணர்வுகளை கண்டு கழிக்கிறது. மூன்றாவதான ஞானக்கண் தெள்ளத் தெளிவடைந்து கொள்கின்றது என்பதாகும்.

## வெண் தேங்காய்

இது தூய்மையானதும் பரிசுத்தமானதுமாகும். எப்போதும் வெண்மையாகவே காட்சி கொடுக்கும் துருவிப் பிளிந்தாலும் வெண்பாலாய் தோன்றும் உருக்கினால் எண்ணையென்ற முத்திப் பேற்றை உணர்த்தும்.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே – திருநாவுக்கரசனார் –

## பருவ வளர்ச்சியில் தேங்காய்

பருவ வளர்ச்சியில் குரும்பை, இளநீர், என்று முற்றிப் பழுத்த நிலையையடைந்து கொள்ளும் போது மும்மலங்களுக்கு அப்பால் "சித்த சுத்தி" என்ற வெண் தேங்காய் இறை என்ற இளநீரை உள்வாங்கிக் கொள்ளும் ***பற்றுக பற்றற்றான் பற்றினை – அப் பற்றே பற்று*** என்பதற்கமைய மனிதனும் இடை விடாத இறை சிந்தனை மூலம் இறைவனைத் தன் வயப்படுத்திக் கொள்கின்றான். அப்போது வெண் தேங்காய் தன்னை ஒடுக்கி மும் மலங்களான ஓட்டை விட்டு தனித்துவப் பட்டுவிடுகிறது. முத்தி நிலையையடைந்து விடுகின்றன. மனிதனும் உலக ஆசா பாசங்களைத் துறந்து உள்ளொளியைப் பெருக்கி இறை இன்பத்தை யடைந்து பேரின்ப பேறு பெறுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ திராய்மடு முருகன் காவடிச்சிந்து

1. முந்தி முந்தி விநாயகனே முதல்வோனே
மூலப்பொருளான கணபதியே அய்யா
தொந்தி வயிற்றோனே துங்கக் கரிமுகனே
அரனின்முன்மகனான திருமகனே
பாற்கடலில் துயில் கொள்ளும் மாயவனே
பாரதத்தை முன்நின்று முடித்த கண்ணா
தேடியே உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
திராய் மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

சடையப்ப சுவாமி கண்ட திராய் மடுவிலே தான்
சக்தி வடிவேலோடு காட்சி தந்தாய்
தனித்து வரும் மக்களுக்கு அருளும் தந்தாய்
தீராத நோய் பிணிகள் தீர்த்தும் வைத்தாய்
பசித்து வரும் மக்களுக்கு பசியும் தீர்த்தாய்
பாவி என்னைப் பாதுகாத்து உயர வைத்தாய்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

சிங்கார வேலவனே என் முன் வா வா
சிவ சக்தி பாலகனே என் முன் வா வா
திருமாலின் மருகோனே என் முன் வா வா
தினம் பணிந்தேன் என் முன்னே வா வா
தங்க மயில் வாகனனே என்முன் வா வா
தரணியிலே உனைத்துதிக்க ஓடி வா வா
தேடியே உன் பாதம் துதிப்பேனையா சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

2. அரனின் கண் கணலாய் வந்தாய்
ஆறுகமலத்தின் உருவாய் நின்றாய்
கார்த்திகைப் பெண் பால் உண்டாய்
சக்தி வடிவேலும் பெற்றாய்
தந்தைக்கு உபதேசம் சொல்லி வைத்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமையனுக்கு மயிலேறி காட்சி தந்தாய்
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

தந்தையிடம் மாம்பழத்தைப் பெறவே எண்ணி
உலகு தன்னை ஒருநொடியில் சுற்றி வந்தாய்
பழம் கிடைக்க வில்லை என்ற பதற்றத்தோடு
பழனியிலே ஆண்டியாக நின்றவேலா
பார்முழுதும் நினைக்க வைத்த பழனி வேலா
பக்தியோடு பாடுகின்றேன் சக்தி மைந்தா
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

நாரதரும் உன்னிடத்தில் வந்து நின்று
வள்ளி வடிவழகு தன்னை வகுத்த போது
மயிலேறி வள்ளி தினைப் புனத்தில் வந்து
வள்ளி வடிவழகு தன்னில் மையல் கொண்டாய்
வேறைம்பி தங்கரூபன் தன்னைக் கண்டு
வேங்கை மரஉருவாக நின்றவேலா
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

3. வேடுவர்கள் வள்ளி தினைப் புனத்திலேதான்
வேங்கை மர உருவாக நின்றபோது
வேரோடு உந்தன்னை அகற்ற எண்ணி
வெட்டினார்கள் வேடுவர்கள் உதிரங்கண்டார்
அய்யையோ அரண் மகனே என்றலற
ஆண்டியாக உருமாறி நின்ற வேலா
தேடியே உன் பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

தேனும் தினைமாவும் தின்றபோது
வேலவர்க்கு தாகமதில் விக்கல் வந்து
சுனைதனில் நீர் சுரப்ப சென்ற போது
பூவலத்தில் தவறியல்லோ விழுந்தாயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையலவள் கை கொடுக்க இழுத்தணைத்து
தாக மில்லை மோகமென்று சொன்ன வேலா
தேடியே உன்பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே.

ஆண்டியென வந்து நின்று மான் மகளை
அணைத்திடவே மான்மகளும் அருவருக்க
ஆனையுடன் அச்சமென்று அவளும் கூற
அண்ணாவே வா என உடன் நினைக்க
ஆனைமுகன் வந்து நின்று ஒலி எழுப்ப
அய்அய்யோ என்றலறி அணைத்த போது
மெய்யான உருமாறி நின்ற வேலா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

4. தையலவன் வேலவரின் உருவம் கண்டு
தயங்கியே பாதமதில் சரணடைந்து
தொண்டனிட்டுத் தன் தவறை உரைத்த போது
தயங்காதே உன்னை மணம் முடிப்பேன் என்றாய்
அவ்வேளை ஆனைமுகன் அருகில் வந்து
ஆசி கூறி இருவர் மணம் முடித்த வேலா
தேடியே உன் பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

நாட்டினிலே நாங்கள் படும் துயரங்கண்டு
நாளிகைக்குள் உன் வரவை நாடுகின்றோம்
சூரர் குலம் அழிக்க வந்த சண்முகனே உன்
சொந்த இனம் அளியுமுன்னே ஓடிவாராய்
காத்து நின்று அருள் கொடுக்கும் கருணை வேலா
காலமெல்லாம் உன்னையே சரணடைந்தோம்
தேடியே உன் பாதம் துதிப்பேனையா - சுவாமி
திராய்மடுவில் உறைவோனே அருள் செய்வாயே

*ஆக்கம்*

**திருமதி வசந்தாதேவி நல்லரெத்தினம்**
**திராய்மடு 6ம் குறுக்கு,**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.வைகுந்தராசா
மாணிக்க ஈஸ்வராசா,
கனடா.

# தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை....

நான் என் தந்தையை மிக கண்ணியமாக நேசிப்பவன். என் தந்தை சற்குருநாதர் சடையப்பா சுவாமியின் சீடர்களில் ஒருவர். சுவாமியினால் ஆக்கப்பட்ட முருக வழிபாட்டு ஆலயத்தின் பிரதம பூசகரும், சுவாமியினால் ஆரம்பிக்கப்பட்ட பாத யாத்திரையின் ஆரம்ப வழிகாட்டிகளிலும் ஒருத்தர். இவரை நான் என் இதயத்தில் வைத்து அன்றும்இன்றும்பூஜித்துவருகிறேன்.இவரோடுஒத்த வணக்கத்திற்- குரியவர் சி. விஜயசிங்கம் அப்பாச்சி அவர்களும் என் குருநாதர் ஆவார். இவருக்கு என்றும் நான் கீழ்ப்படிபவன் அவர் என்றுமே என் விருப்பத்திற்குரியவர்.

நானோ இயற்கையோடு இசைந்து வாழ்ந்து பழக்கப்பட்டவன், ஏழ்மையையே பெரும் விருப்பமாய் கொண்டவன். சுவாமி அவர்கள் வாழ்ந்த திராய்மடுப் பூமி, சமாதி, ஆலயம், என் தாய்தந்தையர்கள் உடன் பிறப்புக்கள், பாதயாத்திரைஅடியார்கள், மாமாங்கேஸ்வரர் மாமாங்கமண் இதனோடு இரண்டறக் கலந்து வாழ்தலே மனங்கொண்ட விருப்பம்."எந்நாடு சென்றாலும் என்னூர் போலாகுமா?"

எனது பொருளாதாரத்தின் கீழ் நிலையை உணர்ந்ததினாலோ இறைவன் மேல் நாடான கனடா அனுப்பி வைத்துள்ளார். அனுப்பியவர் கடைசிக்காலம் மீள என்னை எடுத்து இந்த மண்ணில் வாழச் செய்வார். என்ற நம்பிக்கையுடன் வாழ்கின்றேன். யாத்திரை அன்பர்களான உங்களை ஞாபகப்படுத்திப் பார்க்கின்றேன்.

*"நலமே சென்று வாழ்வு செழிக்க என் வாழ்த்துக்கள்"*


"வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா
வள்ளி மண வாளனுக்கு அரோகரா "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமுனை ஆறு கடந்து மறுகரை செல்லுதல்



யாழையில் தங்கி இளைப்பாறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியொரு பாதயாத்திரை

நான் என்ன தவம் தான் செய்தேன்,
இப்படியொரு பாத யாத்திரை தனை செய்ய

உத்தராட்சம் மாலைதனை அணிந்து
ஆண்டி வேடம் கொண்டேன், பெருமான்
மாமாங்கன் பாதம் முன்னே

கண்டேன் சந்நியாச அப்பனை - எனை
மறந்து நடந்தேன் உகந்தை
முருகனிடம்

வண்ண வண்ணமாய் அழகு காட்டும்
வண்ணாத்தி வெட்டை கடந்து
குதித்தேன் குமுக்கணில் கும்பிட்டேன்,
கண்ணகியம்மனை,

வலித்திடும் பாதத்துடன் சென்றேன்
நாவலடி காடுதலின் கண்டேன்.
ஆனைமுகன் பாதம் தனை, அங்கே
தொலைத்தேன் என் பாவங்களை.
படித்தேன் முருகன் கவசத்தை,
முருகா........ முருகா........ என்று,

நாட்கள் தொலைந்து தொழையாப்பழ
காடு கடந்து அடைந்தேன் - முருகா
உன் வனத்தை,
பாடினோம் முருகன் பாடல்,
ஆடினோம் முருகன் உன்திரு கூத்து,
குதித்து கும்பிட்டோம் உன் பூமியினை,
தனித்திருந்த கட்டகாமக் காட்டில்
விக்கினம் தீர்க்கும் விநாயகனின் திரு
உருவை கண்டு தெளிந்தேன் என் பயந்தனை,
போய் வா எனது தம்பியிடம் என்று
கடக் கண் பார்வை அர்த்தம் கண்டு

ஓடினேன் வீரச் சோலைக்கு கண்ணுற்றேன்
மாணிக்கம் உருளும் மாணிக்க கங்கையை,
அடைந்தேன் கந்தனை அழைத்தான்
கடம்பனை, பெற்றோன் பெருமான்
கோடி அருளை

அரோஹரா, அரோஹரா......
கந்தா உன் கருணையே கருணையல்லவா!..

நான் என்ன தவம்தனை செய்தேன்
இப்படி யொரு பாத யாத்திரை தனை செய்ய

**திரு. திருமதி. செல்வராஜன்**
**மாரியம்மன் கோயில் வீதி,**
**கல்லடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை

**திரு. பா. நந்தகுமார்,**
ஓய்வு பெற்ற பொது சன சேவை லிகிதர்
புதுநகர்
ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார்
பாதயாத்திரிகர் சங்க
செயலாளர்.

நான் பாதயாத்திரை மேற்கொண்டது 2004ம் ஆண்டு காலமாகும். இதற்கான காரணம் எனது மகனின் இதய நோயாகும். அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென டாக்டர்களும் கூறியிருந்தார்கள். அத்தோடு பெண் பிள்ளைகளின் திருமண விடயம். இந்த விடயங்களை வைத்து கவலையுற்றோம். இறுதியாக மனைவியும் நானுமாக சேர்ந்து அந்த கதிர்காம முருகனுக்கு ஓர் நேர்த்தி வைத்தோம். அதைப் பாதயாத்திரை மூலம் செய்வதாகவும் உறுதி பூண்டு 2004லில் வெளிக்கிட்டோம். மிக பயபக்தியுடன் மன்றாடி முருகனை வேண்டி யாத்திரை செய்தோம். மகனுக்கான சிகிச்சைக்கு பல தரப்பட்ட பகுதிகளில் இருந்து பணவுதவிகள் கிடைத்தன. அரச நிதியும் கிடைத்தது. சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. மகன் ஆரோக்கியமானார். பெண் பிள்ளைகளின் திருமண நிகழ்வும் நிறைவு பெற்றுள்ளது. இவை யாவும் இரண்டு வருடாங் களுக்குள் 2006ம் ஆண்டுக்குள் நிறைவு பெற்றுள்ளது. யாத்திரையில் இவ்வளவு மகிமை இருக்கிறது என்பது அன்றுதான் புலப்பட்டது. தொடர்ந்தும் யாத்திரை மேற்கொள்கிறேன்.

**வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமான் திருவிளையாடல்

திரு.க. நடராசா (தலைவர்)
ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார்
அன்னதான சபை
அமிர்தகழி

பல காலமாக யாத்திரை கொள்பவர். நான் இருந்தாலும் மறக்கவொனாத ஆண்டு 1998 யாத்திரையாகும். நடையின் போது கால் பித்த வெடிப்பால் காயமுற்று பெரிய வேதனை கால்களுக்கு கத்தாழை வைத்துக் கட்டிவிட்டார்கள். பொல்லுக்கம்பில் நடந்தேன். பயணம் மாவிலாறு இரவுத் தங்கலை அடைந்துவிட்டது. எங்கள் கூட்டத்தோடு தொடர்பு இல்லாத வயோதிபரும் தங்கலில் கலந்து கொண்டார். சுவாரசமாக உரையாடிக்கிடந்தோம். சாமமானது வயிற்றுக்குள் வலிக்குது என்றார், மாத்திரையும் கொடுத்தோம். எல்லோரும் சரியான நித்திரை ஒருவர் மட்டும் ஊசலாடுவதைக் கண்டேன். இவர்தான் எங்களைச் சுற்றித் திரிந்து காவல் செய்வதும் தீனா காய்வதுமாய் இருந்தார். நான் கேட்டேன் சுவாமி வயிறு வலிக்குது என்கிறீர்கள். அலட்சியமாய் சிரித்துக் கொண்டு திரிந்தார் பொழுது விடிந்தது. நடையை ஆரம்பித்துக் கொண்டோம். வயோதிபர் என்னிடம் சொன்னார் நீயோ காலேலாத ஆள் நான் முந்துகிறேன் நீ வா தங்குமிடத்தில் சந்திப்போம் என்று போய்விட்டார். பின்னால் வந்தோர் என்னைக் கேட்டார் எங்கே உங்கள் வயோதிபச்சாமி என்று முன்னால் போய்க் கொண்டிருக்கிறார் என்றேன். இல்லை பின்னால் வருகிறார் என்றார்கள் அவர்கள். எனக்குள் பின்பு இவரை வைத்து யோசிக்கலானேன். யாழை சென்று விட்டோம் அங்கே எனது கால் கட்டுக்களை அவிழ்த்து நீராடியும் கொண்டேன். வயோதிபரைக் காணத் துடித்தேன் அறவே காணவில்லை. மற்றவரிடம் விசாரித்தேன் எவரும் கண்டதாகவே கூறவில்லை. என்னுடைய கால்கள் பழைய நடையை ஆரம்பிக்கும் போது இருந்த கால்களாய் இருந்தது. வேதனை என்பதேயில்லை. எங்களோடு இணைந்திருந்த வயோதிபர் முருகப் பெருமானே என உணர்ந்தேன். என்றும் அவர் நினைவோடு வாழ்வதே என் விருப்பம்.

*சக்தி வேல் முருகனுக்கு அரோகரா!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான பாதயாத்திரை

*நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க*
*ஏகன் அநேகன் இறைவ னடி வாழ்க*
*ஈசன் அடி போற்றி எந்தையடி போற்றி*
*தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி - திருவாசகம்*

இந்தப் பிரபஞ்ச உலகைத் தாங்கி நிற்பது இறைவனுடைய திருப்பாதமே. இந்த இறைவன் மானிட உருவெடுத்து பாதம் பதித்த இடங்களுமுண்டு இப்படியான மண்ணில் அருள் சக்தி மேலும் நிறைந்திருக்கும். வினைப்பயனால் மானிடராய் பிறந்தோரின் பாதங்கள் இங்கு பட்டதும் பிறவித் துன்பங்களில் இருந்து விடுபட்டு தூய்மையடைந்து கொண்ட வரலாற்றுச் சம்பவங்களும் உண்டு. அப்படி அமைந்த இடம் தான் புனித கதிர்காமம்.

இடத்தின் மகிமை உணர்ந்து மக்களை அங்கு அனுப்பி அவர்களின் துன்பத்தை போக்க எண்ணி மட்டக்களப்பு திராய்மடு மண்ணில் வந்தடைந்தவர் தான் **"செஞ்சடைப் பெருமான் சற்குருநாதர் சடையப்பா சுவாமிகள்"** இவர் தன்னை அண்டிய அடியார்களுள் சிலரை அடையாளம் கண்டு உரிய பொறுப்புக்களை அளித்தார். அதில் தற்துணிவோடு இன்றும் சோராது பணி செய்து வருபவர் தான் விஜயப்பா சுவாமிகள் இவரோடு பாதயாத்திரையில் 1998ம் ஆண்டு நான் இணைந்தவனாவேன். எனது கன்னி யாத்திரையின் போதே இவர் உருவத்தில் சடையப்ப சுவாமிகளைக் காணக் கிடைத்த தென்பதை அடியார்களாகிய உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்வின் பின் தொடர்ந்து யாத்திரை மேற்கொண்டேன். யாத்திரைதொடங்கும் முன் அப்பாச்சியுடன் களுதாவளை பிள்ளையார் ஆலயம் சென்று அங்கப்பிரதட்சணம் செய்வதையும் வழக்கமாக்கிக் கொண்டேன். இப்படி ஒரு தடவை அங்கப்பிரதட்சணை செய்து கொண்டிருக்கையில் ஓர் அழகிய பையன் காவடிச் சிந்தை இனிமையாக பாடியும் ஆடியும் கொண்டிருந்தான். எனது பிரதட்சணை நிறைவடைந்ததும் பையனைச் சந்தித்து உரையாட வேண்டுமென நினைத்தேன் நேர்த்தி நிறைவடைந்ததும் ஆவலோடு பையனை மூலைமுடுக்கெல்லாம் தேடினேன் காணவேயில்லை. மனம் சோர்ந்தவனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பினேன் அப்பாச்சி புன் சிரிப்போடு அது யாருமில்லை முருகப் பெருமானே என்று சொன்னார். மெய் சிலிர்ப்ப நின்றேன்.

ஒரு முறை பாதயாத்திரையின் போது தார்றோட் பாதையைத் கடப்பதற்கு பாதணிகள் வைத்திருந்தேன் இருந்தும் இவைகளை திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் தவற விட்டு விட்டேன் எல்லாம் இறைவன் செயலென நினைத்து நடந்தேன். கால்கள் பொக்களித்தன வலியும் உண்டாகியது. பயணம் ஊறணியை அண்மித்தது. அங்கே பாதையோரமாய் புதிய இரு பாதணிகளைத் தாங்கிய வண்ணம் அப்பாச்சி நின்றார். **இந்தா போடு மனே** என்று தந்தார். அங்கே இவரூடாக இறைவன் செயல்பட்டதை உணர்ந்தேன். யாத்திரை பயன் மிக்கது. அற்புதமானது இதனை அனுபவித்தவர்களில் நானும் ஒருத்தன். இயற்கையை அனுபவிக்கலாம். அன்பான கூட்டத்தோடு பழகலாம். துன்பங்களிலிருந்து விடுபடவும் தேவைகள் நிறைவுறவும் ஆனந்தமான யாத்திரை இதனை வழிநடத்தும் அப்பாச்சிக்கு என்றும் கடப்பாடு உடையவனாவேன்.

அப்பாச்சி அவர்கள் குரு ஆணைக்கு கட்டுப்பட்டவர் ஆதலால் இவரால் முன்னெடுக்கப்படும் பாதயாத்திரையில் எப்போதும் இடையூறுகள் வருவதில்லை. ஏழைகள் போல் வாழ்ந்து இல்லை என்று சொல்லாது உணவளித்த சடையப்ப சுவாமிகளின் வழி வந்ததினாலோ யாத்திரையின் போது உணவுக்கு குறையிருப்பதில்லை.

எல்லோருக்கும் உணவளிக்க காரணமாயிருக்கும் இவர் தான் ஒரு நேரம், ஒரு பிடி உணவுடனே நாளைப் போக்குவர் ஆவார். இவ் யாத்திரையினால் பல்லாயிரமானோர் பலன் பெறவும் இவர் காரணமாக தோற்றமாய் நின்று செயற்படுகின்றார். இவரை எமக்களித்த குரு நாதர் சடையப்ப சுவாமிகளுக்கும் அந்த திராய்மடு முருகப் பெருமானுக்கும் வாழ்நாள் கடற்பாடுடையவனாவேன்.

"சக்தி வடிவேலனுக்கு அரோகரா"

**திரு. அழகையா பிரபாகரன்,**
கிராம உத்தியோகத்தர்
சின்ன உப்போடை, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தையின் வலிமை

க. ஜெயநாதன்
செங்குந்தர் வீதி,
மட்டக்களப்பு.

எனது ஆரம்ப யாத்திரை 2002ம் ஆண்டு ஆகும். 63 பேருடன் இணைந்து கொண்டேன். அனுபவமில்லாத காரணத்தினால் எனது அடப்பையை பாரமாக்கிக் கொண்டேன். அதுவும் நீர் நிறைந்த பெரிய தேங்காய்களும் அடங்கும். பயணம் உகந்தையை அடைந்தது. அங்கேயும் காட்டுப் பகுதிக்குள் சமைப்பதற்கான உணவுப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதிலும் தேங்காய் அடங்கியது. பலத்த சுமையோடு கட்டகாமம் அடைந்தோம். சில சுவாமிகள் இராத் தங்கலை அங்கே செய்யவுள்ள தாகவும் உணவுப் பொருட்களை கொடுக்குமாறும் பணித்தனர். ஐயோடா! என்று கூறி கொடுத்தேன். இதை அவதானித்த அப்பாச்சி என்னது என்று கேட்டார். தேங்காய்ச் சுமை வாட்டி விட்டது என்றேன். "வாட்டியதே வாழ்வளிக்கும் என்றார்". பயணம் முடிந்து வீடு வந்தடைந்தேன். எனது முன்னால் உள்ள மேசையில் தேங்காய் சிரட்டையொன்று காணப்பட்டது. எழுந்து எடுத்தேன். அதில் ஓம் பதக்கம் வெட்டலானேன். பதக்கங்களை யாத்திரை சுவாமிகளுக்கு வழங்கினேன். அவர்கள் பாராட்டும் கிடைத்தது. அது என்னை உற்சாகப்படுத்தியது. தொடர்ந்து பூச்சாடி, 2 அடியில் தேர், உருவப் பீடங்கள், இன்னோரன்ன பல செய்தேன். அது உள்நாடு தாண்டி கடல் கடந்த நாடுகளான ஐரோப்பிய நாடுகள் வரை சென்றடைந்தது. பாராட்டு பண உதவிகள் கிடைத்தன. வெளிநாட்டுக்கு வருமாறு அழைப்புக்களும் வந்தன. எல்லாம் முருகப் பெருமானின் திருவருளே எனக் கொண்டுள்ளேன்.

*யாமிருக்கப் பயமேன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழையில் அக்கினிக்கு நன்றி செலுத்துதல்



குமுக்கன் தங்கலில் உணவு பரிமாறுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்பெருமான் திருத்தாழ் போற்றி

N. நமநாதன்
கொழும்பு.

நான் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவன். செய்யும் தொழிலும் அலுமினியம் பிற்றிங் காலை தொடங்கினால் மாலை வரை இயந்திர இரைச்சலுக்குள்ளே தான் வாழ்க்கை.

கடவுள் பக்தி என்னிடம் நிறையவேயுண்டு எனலாம். இருந்தாலும் யாத்திரை கொள்வோம் என்று நினைக்கவில்லை. நாட்டம் இருந்தது. நட்பு உள்ளே இணைய வைத்தது யாத்திரையில் முதுமை பெற்றவர்களின் அன்பு என்னைத் தென்புபடுத்தியது. கூட்டமாய்ச் சென்றோம். அந்த வருடம் 2007ம் ஆண்டு முதல் யாத்திரையின் போதே எனக்கொரு அற்புதம் தென்பட்டது. எனது உருத்திராக்க மாலையின் பெரிய மணியில் இருந்து ஒளி தென்பட்டது 2வதாக உகந்தைக் கடலிலே குளித்து விட்டு கூட்டமாக வரும் போது நிலம் அதிர்வு போல் இருந்தது நான் விழுகின்ற மாதிரி போய் விட்டேன் கூட்டமாக வந்த ஏனையோரிடம் கேட்டேன் தங்களுக்கு அப்படியெதுவும் நிகழ வில்லையென கூறினார்கள். எனக்கொரு வெப்புசாரம் ஏற்பட்டது. இறைவன் என்னோடு இருக்கின்றார். என்பதைப் புரிந்து கொண்டேன். இறைவன் தம்மோடு இருப்பதற்கு இலேசான வழி இறைவ ன் இரக்கப்படும் அளவிற்கு தூய்மையான இடையறாத நினைவு வேண்டும் என்பதே உண்மை.

# ஆனந்தம்

க. ஜெயந்தினி
பாடசாலை வீதி,
மஞ்சம் தொடுவாய்.

பாதயாத்திரை பற்றி கேள்விப்பட்டதும் செல்பவர்களை பார்த்ததும் நான் அனுபவிக்க கிடைக்கவில்லை 2012.06.20 எனக்குள் ஒரு உத்வேகம் உண்டாயிற்று. வெளிக்கிட்டேன். இந்த யாத்திரை சங்கத்தோடு இணைந்து கொண்டேன். இடைத்தூரம் செல்லும் போதே புதிய அறிமுகம் இல்லாமல் போயுள்ளது. அன்பு கொண்ட உள்ளங்களாய், இயற்கை அனைத்து செல்வது அற்புதமாய் இருந்தது. ஏதோ குறுகிய வாழ்வில் அடைபட்டுக் கிடந்த நான் வெளியுலகம் காண்பது போல் இருந்தது. அற்புதம் ஆனந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனே நீ இரங்கினாய்

திருமதி. மேகலா பாலசிங்கம்
பாலமீன் மடு,
மட்டக்களப்பு.

ஒருநாள் 2011.05.04 என் கணவர் நெஞ்சு வலிக்குது என்றார். ஆஸ்பத்திரி கொண்டு சென்றோம். அங்கு குளிரூட்டும் அறையில் அனுமதிக்கப்பட்டார். பின்பு டாக்டர் வந்து ஒரு மணி நேரத்தால் கொண்டு செல்ல வேண்டி வரும் இவருக்கு இருதடவை மார்படைப்பு வந்துள்ளது. காப்பாற்ற இயலாதுள்ளது என்றார். வேதனை தாங்காத நான் பக்கத்தே இருக்கும் ஆலயத்துள் சென்று முருகா உனது கையிலேதான் என் கணவர் உயிர் இருக்கு என்று அழுது புலம்பியவளாய் மீண்டும் குளிரூட்டும் அறைக்கு சென்றேன். டாக்டர் அனுதாபமாய் என்னைப் பார்த்து என்னம்மா நடந்தது என்றார். நான் அவர் முகத்தைப் பார்த்தேன். போய் உங்கள் கணவரைப் பாருங்கள் என்றார். போய் பார்த்தார். கண்களை இமைத்த வண்ணம் சிரித்தார். நான் அந்தக் குமரனை நினைத்து மேலும் அழுதேன். இந்த உடல் இருக்கும் வரை யாத்திரையை தொடர்வேன் என்று உறுதி பூண்டுள்ளேன்.

## என்றும் மறவேன்

கி. சண்முகம்
உப்போடை வீதி,
வந்தாறுமூலை.

நான் சுமார் மூன்று வருடங்களாக இந்தக் கூட்டத்தினரோடு யாத்திரை செய்கின்றேன். அற்புதமான கூட்டம். அன்பான கூட்டம். நான் கதிர்காமக் கந்தரிடம் பெரு விருப்புடையவன். என் தேவைகளை அவர் அறிந்து என்னை வழி நடத்திக் கொண்டிருக்கிறார். அந்த அற்புத ஜோதியை என்றும் மறவாதிருப்பதே என் பணியாகக் கொண்டிருக்கிறேன்.

*ஓம் சக்திவேல்!!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுதல்

திருமதி. மோகன்
(சாஸ்திரியார்)

2008ம் ஆண்டு கதிர்காமம் கொடியேறி 3ம் நாள். வீட்டில் நித்திரைக்குச் சென்று விட்டேன். அன்றிரவு வயிற்றுவலி ஆரம்பித்து விட்டது. கணவரும் இரவு வேலைக்குச் சென்றிருந்தார். தனியாக விடியும் வரை சமாளித்தேன். விடிந்ததும் உறவினர்களிடம் விடயத்தைச் சொன்னேன். ஓட்டோவில் ஏற்றி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். டாக்டர் சோதனை செய்தார். அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென தியேட்டர் கொண்டு சென்றனர். மயக்க ஊசி ஏற்ற தயாரானது. நான் மறுத்துவிட்டேன். என் கணவரைப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகின்றது நான் ஓர் உதவியற்றவள். எனக்கு நடக்கும் அறுவை சிகிச்சை தோல்வியுற்றால். அவரை ஒரு தடவை பார்த்து கதைத்து விட்டு மறுநாள் செய்வோம் என்றேன். மீண்டும் வாட்டில் அனுப்பப்பட்டேன். நடந்ததை பக்கத்துக் கட்டிலில் உள்ளோர்களிடமும் சொன்னேன். அவர்கள் என்னைப் பேசினார்கள். கணவனும் வந்தார். அவரும் சாதாரண அறுவை சிகிச்சை தானே செய்திருக்கலாமே எனக் கூறிச் சென்றார். மனம் பெரும் வேதனை கட்டிலில் இருந்துகொண்டு யோசித்தேன். எதிரே சுவரில் ஒரு முருகன் படமிருந்தது. எனது நிலைமையைச் சொல்லி அழுதேன். காலையில் கடமையேற்ற மருத்துவதாதி என்னிடம் வந்து உங்களுக்கு ஒப்பிறேசன் இப்போதைக்குத் தேவையில்லையாம் குளிசை தருகிறோம் போடுங்கள். இப்போ ரிக்கற் வெட்டியாச்சு என்றார். வீடு சென்றுவிட்டேன். கணவரோடு உரையாடினேன். நான் நடந்து கொண்ட முறை பிடியாமல் தான் டாக்டர் ரிக்கட் வெட்டியிருக்கிறார் போலுமென்று அப்படியானால் வேறு ஒரு தனியார் மருத்துவமனையில் காட்டுவோம் என கூறி சென்றோம். அனுமதிக்கப்பட்டேன். பரிசோதனை செய்தார்கள். இறுதியில் அப்படியில்லை அறுவை சிகிச்சை தேவையில்லை என்றார். வீடு வந்துவிட்டோம். இதுவரை வயிற்றுவலி யென்று எதுவுமில்லை. யாத்திரை தொடங்கினேன். அறுவை சிகிச்சை ஏற்பாட்டுக்கும் ரிக்கட் வெட்டுவதற்குமிடையில் நடந்தது முருக வேண்டலே, ஆகவே அந்த இறையருள் எனக்கு கிடைத்திருக்கிறது.

***வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதைக் கவர்ந்த அற்புதம்

தி. செல்லப்பாக்கியம்
சீலாமுனை

எனக்கு கோவில் என்றால் பிரியம்,எங்கே திருவிழா நடக்கின்றதோ அங்கே தங்கி முற்றத்தில் உறங்கிக் கிடந்துதான் வருவேன். 2010ம் ஆண்டு கதிர்காமம் கால் நடையாய் போக விரும்பினேன். ஸ்ரீமாமாங்க பாதயாத்திரிகர் சங்கத்தோடு சேர்ந்து புறப்பட்டேன். எனக்கு இந்தப் பயணம் மனதுக்கு நன்றாக பிடித்து விட்டது. யாத்திரை என்ற பெயருடன் எத்தனையோ கூட்டங்கள் போகலாம்.ஆனால் இந்தக் கூட்டங்கள் போல் இருக்க முடியாது. கண்டிப்பான கட்டுப்பாடு,ஆளுக்கு ஆள் உதவுதல் பஜனை பரவச ஆட்டம் அதுவே முருகப் பெருமானுக்கு பிடிக்கும் என்று நம்புகிறேன். ஒரு சிறு சம்பவம் சமையலுக்கு விறகு எடுக்க போனோம் காட்டினுள் புக வேண்டியிருந்தது. உள்ளே புக பயமாகவும் இருந்தது. திரும்பி வந்து விட்டோம். வரும் வழியில் அனாதரவாய் விறகுக் கட்டு ஒன்று கிடந்தது. ஆளைக் காணவில்லை எடுத்தால் என்ன என்று எங்களுள் ஒருவர் கேட்டார். சரியில்லை என்றேன். திரும்பி கூட வந்த மற்றுமொருவர் எடுப்போம் உரியவர் வந்தால் கொடுப்போம் இல்லை யென்றால் நமது பாவனைக்கு எடுப்போம் என்றார். இறுதியில் எடுத்தே விட்டோம். கடைசிவரை யாரும் வரவில்லை எங்கள் பயத்தை உணர்ந்த முருகப் பெருமானின் லீலையே இதுவென உணர்ந்தோம்.

*முருகப் பெருமானுக்கு அரோகரா.....*

## தன்னையே சரன்

திரு. வ. புவிராஜ சிங்கம்
மட்டக்களப்பு.

மலர் மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார்
நிலன்மிசை நீடுவாழ் வார்.

நெடும் காலம் பூமியின் மேல் வாழ்பவர்கள், இறைவனின் புனிதத்திருவடியை இடையறாது சிந்தித்துக் கொள்ள வேண்டும்.

இதில் பூமியும் திருவடி என பாதமும் முக்கியத்துவம் பெறுகிறது. காலத்தால் அழியாத தேனிலும் இனிய தெளிவும் ஆழமும் மிக்க பொய்யா மொழிப் புலவர் கருத்துக்கு உயிர் ஊட்டி நிற்பது பாதயாத்திரை யெனலாம். நாம் பூமியில் கண் வாழ்கின்றோம். புனித திருவடி அளைந்த மண்ணில் நம் வினையுடல் பாதத்தை வைத்து சரணாகதியடைகின்றோம்.

தன்னையே சரணாகதியடைந்தேன் பாவவினைகளில் இருந்து விடுபட்டவர்களாவார் யான் கண்ட உண்மை.

*அரோகரா......*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹட்டகாமம் வீரச்சோலைப் பயணம்



நாவலாறு நோக்கிய பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்வூட்டும் மனம்

பாதயாத்திரை என்பது பழைமை வாய்ந்தது என்பதை வரலாறுகள் மூலம் அறிந்திருக்கிறேன். அப்பர் சுவாமிகள்,திருஞானசம்பந்தர் , விவேகானந்தர் போன்றோர் வரலாறுகளில் யாத்திரை முக்கியத்துவம் பெறுகின்றது. எனது கணவர் சகோதரர்கள் இதில் ஈடுபடுவதால் எனக்கு இதில் நாட்டம் ஏற்பட்டது.

இருந்தாலும் உடலோடு இரத்த அழுத்தத்தோடு சம்பந்தப்பட்ட நோயிருந்தமையால் யாத்திரை பொருத்தமற்றது என்ற உணர்வும் ஏற்பட்டது. இருந்தாலும் 2010ம் ஆண்டு மனத்துணிவோடு மாத்திரைகள் போடுவதையும் நிறுத்திக் கொண்டு புறப்படலானேன். அங்கே யாத்திரிகளோடு இணைந்து கொண்ட பின் பல சுவாரசியமான நிகழ்வுகளைக் கண்டேன். தலைமைத்துவம்க் கட்டுப்பாடு நேரத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவம்,திட்டமிட்ட ஒழுங்கு முறை, பக்தி ஒழுக்கம் பரஸ்பரநேசம், உடலால், உணர்வால் ஒரு சுதந்திரத்தை அனுபவிக்க கிடைத்தது. இதனால் விடயங்களை வைத்து யோசிக்கும் தன்மை இல்லாமல் போய் விட்டது. உடலில் ஒரு நோய் இருந்ததா என்று என்னை நானே கேட்பது போல் இருந்தது.

பார்க்கும் இடமெல்லாம் காவியுடையும், கோபுர தரிசனமும், காது நிறைந்த அரோகரா ஓசை பச்சிலை செடிகளிலும் கொடிகளிலும் காட்டு மணமும்.கற்பூர சந்தன வாசனையும் வாயார நமைமறந்து தேவார திருவாசகம் ஓதுவதாலும்,முழுமையான பக்தி மார்க்கத்துள் மூழ்கிக் கொள்வது போல இருந்தது. மீண்டும் அந்தநாள் எப்ப வருமோ என்ற விருப்பு எழலாயிற்று. இதற்கு காரணமாய் இருந்த கடவுளுக்கும் சடையப்ப சுவாமிக்கும் வழிவந்த அப்பா சுவாமியையும் என் அன்பு அடியார்களையும், அடியேன் என்றும் மனதில் வைத்திருக்கின்றேன்.

**இறைவா! உன் திருந்தாள் அபயம்....**

*திருமதி. ந. சற்குணம்*
சின்ன உப்போடை.
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன் செயல்

திருமதி.அ.சரோஜினிதேவி
499 திருமலை வீதி
மட்டக்களப்பு.

1998ம் ஆண்டு பாதயாத்திரை மேற்கொண்டேன். எனக்கு பிள்ளைகளின் படிப்பு தொழில் விடயங்கள் பற்றி பெரும் கவலை. இதை யாரிடம் சொல்லி தீர்வு காணலாம் என்று நினைத்துக் கொண்டு திரிந்தேன். யாத்திரை ஒரு விரதம் ஆதலால் இதனை மேற்கொண்டு என் குறைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என முடிவு செய்தேன். யாத்திரையை மேற்கொண்டேன். ஆனால் அந்த இறைவன் முருகனின் திருவருளால் பிள்ளைகள் பரீட்சையில் முன்னேற்றம் கண்டனர். அவர்களுக்கு தொழில் கிடைத்தது. திருமண வாழ்க்கை அமைந்தது குழந்தைகள் கிடைத்தன. நான் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனது அனுபவத்தை வைத்து மற்றவர்களுக்கு கூறு வதாய் இருந்தால் இறைவனையும் வேண்டிக் கொண்டு நமது முயற்சியும் இருந்தால் வாழ்வை இலேசுபடுத்தலாம்.

*அரோகரா.....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# த(ள)ல பாத யாத்திரை

செஞ்சடைப் பெருமான் சற்குருநாதர் சடையப்பா சுவாமிகளின் வழிவந்த அப்பா சுவாமிகளினது பாதாரவிந்தங்களை வணங்கி, குமரன் சுவாமியின் ஆசீர்வாதத்துடன், ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாத யாத்திரிகர் சங்கத்துடன் இணைந்து எம் பெருமான் முருகப் பெருமானின் எனது கதிர்காம த(ள)ல பாத யாத்திரையின் (2012) அனுபவங்களினை யாத்திரிகர்களுக்காக பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த அற்புத லீலைகளினை மனித வாழ்வின் நான்கு வழி முறைகள் மூலம் பகிர்ந்து கொள்கின்றேன்.

**அ. பிரமச்சரியம் :-** எனது கதிர்காம கந்தனின் யாத்திரை வாழ்கைப் பயனத்தின் முதல் படியான பிரமச்சரியத்தினை நோக்கி பாணமை கிராமத்தின் பிள்ளையார் ஆயைத்தினை அடைகின்றேன். அங்கு மூத்த தொண்டர் பிரபாகரன் அடியார் அவர்களையும், தொண்டா நந்தா அடியார் அவர்களினையும் சந்தித்து யாத்திரிகர் சங்க அங்கத்தவராக இணைந்து கொள்வதற்கான விண்ணப்பத்துக்கான பிள்ளையார் சுளியினை பாணமை பிள்ளையார் இடவைத்தார். அவ் வேளை யாத்திரிகை பற்றிய ஒழுங்கு முறைகள் ஆரம்ப விடயங்கள் எனக்கு தெரியாது. அங்கு ஏற்கெனவே அறிமுகமாக இருந்த ஆசிரியையான தொண்டர் யோகம்மா அடியார் அவர்களினை சந்தித்தேன். அவர் தாயின் ஸ்தானத்தில் இருந்து முடிதேங்காயில் உருத்திராட்ச மாலையினை வைத்து வேல் உள்ள இடத்தில் வைக்குமாறும் அதனை அப்பா சுவாமி யாத்திரை வெளிக்கிடும் வேளை குரு முத்தி நிலை மாலையாக அணிவிப்பார் எனவும், காவி வஸ்திரத்தினை அணியுமாறும் கூறினார். முடிதேங்காயினை வேலின் அருகில் வைக்கும் போது எம் பெருமான் முருகப் பெருமானி தோற்றத்தில் ஒருவர் அமர்ந்திருப்பதினை கண்டேன். பின்பு இச் சுவாமி யாரென ஆசிரியையான தொண்டர் யோகம்மா அடியார் அவர்களிடம் வினவியபோது இவர்தான் குமரன் சுவாமிகள் என கூறி யாத்திரையின் போது சுவாமிக்கு இச் சுவாமியைப்பற்றி புரிந்து கொள்ளும் என கூறினார். சிறிது நேரத்தின் பின்பு அப்பா சுவாமி அவர்களால் புதிய யாத்திரிக சுவாமிமார்களுக்கு உருத்திராக்க குரு முத்தி நிலை மாலை அணிவிக்கப்பட்டது. அதில் ஒரு அற்புதம் என்னவென்றால் ஒவ்வொருவரும் வைத்த மாலையினையும், தேங்காயினையும் சரியாக உரியவர்களுக்கே அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி அவர்களால் அணிவிக்கப்பட்டது. அவ் வேளை எனது முடிதோங்காயினை எடுத்து எனது கையில் தந்து குரு முத்தி நிலை மாலையினை அணிவித்தார். அடியேன் அப்பா சுவாமி அவர்களுக்கு பாத பூசையினை மேற் கொண்டேன். அவ் வேளை அப்பா சுவாமி அவர்களின் ஆசிர்வாதமும் அரவணைப்பும் கிடைக்கப் பெற்றது. அதன் மூலம் பிரமச்சரிய நிலையினை எய்தினேன். அன்று முதல் இன்று வரை எனது ஆன்மீக வாழ்க்கையின் குருவாக அப்பா சுவாமி அவர்களினை ஏற்றுக் கொணடு அவரின் வழி காட்டலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

**ஆ. கிருகஸ்ரம் :-** இந் நிலையினிலேயே எனது பாணமை பிள்ளையார் ஆலயத்துக்கும் சன்னியாசி மலைக்கும் இடைப்பட்ட யாத்திரையானது அமைந்து காணப்பட்டது. இக் கிருகஸ்த நிலையில் என்னை பரீட்சிப்பதற்காக எம் பெருமான் பல அசௌகரியங்களினைத் தந்தார். குறிப்பாக யாத்திரை பையைக் கூட என்னால் தூக்கி செல்ல முடியாத சோதனைகளைத் தந்தார். யாத்திரையை கைவிட்டு திரும்பி செல்ல வேண்டிய மன நிலையைத் தோற்றிவித்தார். இவ் வேளையில் எனது குருவை நினைத்தேன். எம் பெருமானை எண்ணி மனம் உருகி நடக்க முடியாமல் சென்று கொண்டிருந்தேன். அவ் வேளை குருவான அப்பா சுவாமி அவர்கள் தோன்றினார். விரைந்து வா என்று அழைத்து அரோகரா அரோகரா எனும் ஓசையினை எழுப்பிய வண்ணம் வருமாறு கூறினார். அவ்வாறே நான் மேற்கொள்ள என்னை அறியாத ஒரு உற்சாகம் ஏற்பட்டது நடை வேகமாகியது சென்று கொன்டிருந்த வேளையில் ஒரு மலையடிவாரத்தில் சிறிய கோயிலொன்று தென்பட்டது அவ்விடத்தில் யாத்திரிகர்கள் தங்கிக் கொண்டிருந்தனர் அவ்விடம்தான் சன்னியாசி மலையென அறிந்தேன். அன்றைய நாள் யாத்திரையின் மாயை வலையினில் சிக்குண்டு தவிர்த்த எனக்கு குரு ஆனவர் வழி காட்டினார்.

**இ.வானப்பிரதிஸ்டம்:-** சன்னியாசி மலையிலிருந்து வீரச்சோலை பிள்ளையார் ஆலயத்தினை அடையும் வரையான பிரதேசங்கள் அனைத்தும் வனப் பிரதேசமாகவே காட்சியளிக்கின்றது. இதனாலேயே இப் பிரதேசத்துடனான யாத்திரை அனைத்தும் வானப்பிரதிஸ்டத்துக்குரிய இடமாகவும், காலமாகவும் அமைகின்றுது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈ.சன்னியாசம்:-** ஒரு மனிதன் வானப்பிரதிஸ்டம் மேற்கொண்டால் தான் சன்னியாசத்தினை செய்ய முடியும். எனவே தான் இன் நிலையினை பெற்ற சன்னியாசி வாசிகள் வாழ்ந்த. வாழ்ந்து கொண்டிருக்கின்ற, வாழ்ந்து சமாதியாகிய சன்னியாசிகளின் ஆன்மாக்கள் வாழ்கின்ற வனப் பிரதேசமாகவே சன்னியாசி மலைப் பிரதேசம் அமைகின்றது. இங்கு தங்கியிருக்கும் இரவினில் மலையடிவாரத்து கிணற்றில் தீர்த்மாடி இரவு ரொட்டி சுட்டு பொங்கலிட்டு மரவு வழி பூசையை யாத்திரிகர்கள் செய்கின்றனர். இதனை எனது உள்ளுனர்விலும், சிந்தனையிலும் யாத்திரிகர்கள் மூதாதயர்களான சன்னியாசிகளின் ஆசிர்வாதத்தினப் பெற்றுக் கொண்டு சன்னியாசிகளாகும் பூசையாகவே உணர முடிகின்றது. இதனாலேயே நாம் சன்னியாசி மலையடியிலுள்ள சன்யாசிகள் வாழ்ந்த குகைக்கருகில் நின்று அரோகரா அரோகரா என ஒலித்தால் அக் குகையிலிருந்து வரும் எதிரொலியின் மூலம் உணரமுடியும்.

நாங்கள் அப்பா சுவாமியின் வழி நடத்தலுடன் எம் பெருமான் சன்னிதியினை அடைந்தோம். எம் பெருமானை தர்சித்து செஞ்சடைப் பெருமான் சற்குருநாதர் சடையப்பா சுவாமிகளின் வழிவந்த அப்பா சுவாமிகளினது குமரன் சுவாமியினதும் ஆசீர்வாதத்துடன், ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்க யாத்திரை யானது முற்றுப்பெற்றது.

ஆகவே ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் பாதயாத்திரிகர் சங்க யாத்திரிகர்கள் செஞ்சடைப் பெருமான் சற்குருநாதர் சடையப்பா சுவாமிகளின் வழியினை பின் தொடர்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்து குரு வழி பேன வேண்டி குரு நாதர் பாதம் பனிகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.பா.நந்தகுமார்,
பாதயாத்திரை சங்க செயலாளர்,
மட்டக்களப்பு.


இவ் வருடம் யாத்திரை நிகழ்வு அருள் மிகு நல்லதம்பி சுவாமி அவர்களினால் 1963ம் ஆண்டு சிறு குழுவாக ஆரம்பிக்கப்பட்டதாகும். இதில் அங்கம் வகித்து முன்னெடுத்தவர்களான அமரர். பாலசுப்பிரமணியம் மற்றும் வைகுந்தராஜா, மயில்ப்போடி அப்பா அவர்களினால் முன்னெடுக்கப்பட்டு 50 ஆண்டுகளினை எட்டியுள்ளது. பல தரப்பட்ட சூழல்கள், அனர்த்தங்கள், யுத்த இன்னல்களுக்கு மத்தியிலும் தற்துணிவோடு குரு ஆணையைத் துணைக் கொண்டு வழி நடத்திக் கொண்டிருக்கும் குரு நாதர் சி. விஜயசிங்கம் அப்பாச்சி அவர்களை யாத்திரை ஆரம்பித்தவர்கள் சார்பாகவும், அவரை கௌரவித்து ஞாபகர்த்தமாக சிறிய தொரு நூலையும் வெளியிட வேண்டும் என யாத்திரை அடியார்களினால் முன்வைக்கப்பட்டதனாலும் பொதுக்கூட்ட தீர்மானத்தின் படி ஒவ்வொருவரிடமும் கட்டுரைகள், அனுபவங்கள், அற்புதங்களினையும் வேண்டியிருந்தோம். இறுதி வரை ஆக்கங்கள் குறைவாகவே கிடைத்தன. நூலை நிறைவு செய்ய சிரமமாக இருந்தது. அடியார்களிடம் ஆர்வம் நிறையவே இருந்தாலும் காலஅவகாசம் இல்லாமையையே காரணமாகத் தென்பட்டது. எதிர்வரும் வருடங்களின் போது இப்படியொரு நூலை வெளியிடுவதென சங்கம் தீர்மானித்து இருக்கின்றது. அதன் போது ஏனையவர்களின் ஆக்கங்களை சேர்த்துக் கொள்ளலாமென தீர்மானித்துள்ளோம். ஆதலால் உங்கள் விமர்சனங்களும், கருத்துக்களும் எதிர்கால வெளியீட்டுக்கு காத்திரமாக அமையும். இவ் வெளியீட்டுச் செயற்பாடானது இறை செயலே ஆகும். குறைகள் காண்பினும் இறை செயலாய்க் கொள்க. பெருந் தன்மை இறையருள் உள்ளவர்களாக்கும். பல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

நன்றி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org